நன்றி - ஊடறு

# மை

கவிதைத் தொகுப்பு



ஊடறு வெளியீடு

நன்றி - ஊடறு

# மை

கவிதைத் தொகுப்பு

ஊடறு வெளியீடு

2007

# MAI . மை

## Collection of Poems by 35 Poets

## - Women's Writings -

35 கவிஞைகளின்

கவிதைத்

தொகுப்பு

Published on
June 2007

Published & Compiled
by
Ranji (Swiss)
Theva (Germany)
email :
udaru@bluewin.ch

Layout by
Ravi (swiss)

Cover
Front cover art by
arathy (14), Swiss
Back cover photo by
ilakiya (14), Norway

Printed at
Jothy Enterprises
Chennai - 600 005

Distribution in India
Vidiyal Pathippagam
11, Periyar Nagar
Masakkalipalayam (North)
Coimbatore 641 015
email: sivavitiyal@yahoo.co.in

Price (in India) : Rs.100

## நன்றி

இக் கவிதைகளை ஊடறுவுக்கு அனுப்பிக்கொண்ட கவிஞைகளுக்கு நன்றி.

இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் ஏதாவது ஏற்கனவே வேறு வெளியீடுகளில் வெளிவந்திருந்தால் அந்த வெளியீடுகளுக்கும் எமது நன்றி.

இத் தொகுப்பை அச்சிடுவதிலிருந்து விநியோகம் செய்வதுவரையான உதவிகளை கேட்டபோதெல்லாம் தயக்கமின்றி செய்துதருவதன் மூலம் எம்மை உற்சாகப்படுத்திக்கொண்டிருக்கும் விடியல் சிவா அவர்களுக்கும் எமது நன்றி.

# மையெழுதி

இன்றைய நவீன ஊடக உலகில் பத்திரிகை, சஞ்சிகைகளை விட இணையம் மிகக் குறுகிய நேரத்தில் மிகப்பரந்த அளவில் பார்வைப் புலனைச் சென்றடைகிறது என்பது உண்மைதான். ஆனாலும் ஒரு பதிவு என்று வரும்போது அதற்கு நீண்டகால வாழ்வை இணையம் எந்தளவுக்கு கொடுக்க முடியும் என்பது கேள்விக்குறிதான். அதுமட்டுமன்றி இதில் கீழ்மட்டம்வரை இந்தப் பதிவுகள் எடுத்துச் செல்லப்படுவதற்கான வாய்ப்பும் குறைந்தளவு சாத்தியப்பாட்டையே கொண்டுள்ளது. இந்தக் குறைகளை இலகுவாகவே கடந்துவிடும் எளிமையான வடிவமாக நூல்களை சொல்லமுடியும். இதைக் கருத்தில் கொண்டு ஊடறு இணையத் தளத்தின் 3 ஆண்டுகால சேகரிப்புகளில் உள்ளடங்கிய கவிதைகள் இங்கு மை கவிதைத் தொகுப்பாகிறது.

ஊடறு நூல்தொகுப்பு வெளிவந்து 5ஆண்டுகள் ஆகின்றன. பெண்களின் படைப்புகளைத் தாங்கி வந்த அந்தத் தொகுப்பின் பின்னர்2004 இல் ஊடறு இணையத்தளம் உருவாக்கப்பட்டது. பெண்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் முகமாக பெண்களால் எழுதப்படும் ஆக்கங்கள் இதில் பிரசுரமாகிறது. அதற்குக் கிடைத்துவரும் ஒத்துழைப்பு அபாரமாகவே உள்ளது மகிழ்ச்சி தருகிறது.

பெண்களின் பிரச்சினைகளை மட்டுமன்றி சமூகத்தை, கலைஇலக்கியங்களை ஆண்நோக்கிலிருந்து இடம்பெயர்த்து பெண்நோக்கில் வைத்துப் புரிந்துகொள்வதற்கான முயற்சிகளும் அதன்வழியான பெண்மொழிகளின் உருவாக்கம் பற்றிய பிரக்ஞைகளும் இன்று பெண் எழுத்துகளில் பேசப்படும் பொருளாக முனைப்புக் கொண்டுள்ளது. அந்தவகையில் பெண்எழுத்தின் குறுக்கு வெட்டுத்தோற்றம் பல்வேறு பரிமாணங்களில் மிளிரவேண்டியுள்ளது எனக் கொள்ளலாம். முன்னர் இலக்கிய ஆளுமை, எழுத்து முயற்சி என்பன சிலரின் கைகளில் இருந்த நிலைமாறி பரம்பல் நிலையைப் பெற்று வருகிறது. (இதற்கு இணையத்தளமும் ஒரு முக்கிய காரணம்.)

பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளும் ஒரு சமூகத்தில் பெண் எழுத்தின் ஆளுமை என்பது அச்சமூகத்திற்கு எதிராக ஒரு

மறுப்பு நடவடிக்கையாகவும் எதிர்ப்புச் செயலாகவும் அமைகிறது. அந்த வகையில் எழுத்துச் செயற்பாடுகளுக்கு முடிந்தளவு ஊடறு களம் அமைத்துத் தரும். நவம்பர் 2006ம் ஆண்டு முதன் முதலில் பெண்ணியாவின் (என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை) கவிதைத்தொகுதி ஊடறு வெளியீடாக வந்தது. இப்போ ஊடறு இணையத்தளத்திற்கு வந்துசேர்ந்த 35 கவிஞைகளின் கவிதைகள் -ஊடறுவில் வரிசைப்படுத்தப் பட்டிருக்கும் ஒழுங்கிலும் வடிவமைப்புக்கு இசைவாகவும்- மை தொகுப்பாக்கப்படுகிறது.

பெண்நிலையில் நின்று சொல்லப்பட வேண்டிய சேதிகளை, போர்ச்சூழல் சுமத்தியுள்ள சுமைகளை, வேதனைகளை, அவர்களது உள்ளுணர்வுகளை உரத்த குரலாக இக் கவிஞைகள் பேச முனைந்துள்ளனர். இவை வாசகர்களில் தொற்றிக்கொள்ளும்போது அவை உயிர்ப்புப் பெற முடியும். இக் கவிதைகளும் அந்தத் தாக்கத்தை பாதிப்பை வாசகர்களிடம் தருகிறதா இல்லையா என்பதை வாசகர்களிடமே விட்டுவிடலாம். கவிதை எழுந்து வரும் வாழ்வுச்சூழல், இச் சூழலுக்குள்ளிருந்து எழுந்துவரும் கவி ஆளுமை, சமூகவழக்கின் சொற்தேர்வு என்பன உணர்ந்துகொள்ளப்படுவதில் வேறுபாடுகள் நிலவும்போது எல்லா வாசகர்களையும் குறிப்பிட்ட கவிதைகள் தொற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அது சாத்தியமற்றது மட்டுமல்ல பன்முகத் தன்மைகளை மறுப்பதும்கூட. கவிதைகளை தரம் பிரிப்பதில் இவை இடர்ப்பாடுகள் செய்தே தீரும். இதனால் தரம் பிரிக்கும் அளவுகோல்கள் ஊடறுவிடம் இல்லை. பாதிப்பவை வாழ்தலும் அல்லவை மறைவதுமாக தொடரும் வாசக ரசனை நல்ல கவிஞர்களை காலப்போக்கில் இனம்காட்டிக் கொள்ளும் என்ற நியதி அதன்வழி செயற்பட்டுக் கொள்ளும். மற்றபடி கருத்துநிலை சார்ந்து ஒருசில கவிதைகள் தொகுப்புக்கு சேர்க்கப்படவில்லை.

இக் கவிஞைகளின் ஒத்துழைப்பை நன்றியுடன் ஊடறு நினைவுகூரும் அதேவேளை தொடர்ந்து விடாப்பிடியான எழுத்து முயற்சிகளைத் தொடரவேண்டும் என்று அவாவுகிறது.

பேனாக்களில் மை நிரப்பப்பட்டுக்கொண்டே இருக்கட்டும்!

தொகுப்பாளர்கள்
றஞ்சி(சுவிஸ்), தேவா (ஜேர்மனி)

ஊடறு கவிதைகள்

# 35 கவிஞைகள்
# 105 கவிதைகள்


| | | |
|---|---|---|
| ஆழியாள் | 4 கவிதைகள் | 09 |
| அனார் | 4 கவிதைகள் | 14 |
| புதியமாதவி | 4 கவிதைகள் | 19 |
| மதனி | 3 கவிதைகள் | 25 |
| லீனா மணிமேகலை | 2 கவிதைகள் | 31 |
| வேதா இலங்காதிலகம் | 2 கவிதைகள் | 33 |
| சுகந்தி சுதர்சன் | 2 கவிதைகள் | 35 |
| மோனிகா | 4 கவிதைகள் | 37 |
| பாமா | 4 கவிதைகள் | 41 |
| நளாயினி தாமரைச்செல்வன் | 12 கவிதைகள் | 46 |
| பஹீமா ஜகான் | 4 கவிதைகள் | 50 |
| விஜயலக்சுமி | 1 கவிதை | 56 |
| சுல்பிகா | 3 கவிதைகள் | 58 |
| திலகபாமா | 1 கவிதை | 61 |
| சாரங்கா தயாநந்தன் | 2 கவிதைகள் | 63 |
| எஸ். இஸ்மாலிகா | 1 கவிதை | 65 |
| பாமதி பிரதீப் | 2 கவிதைகள் | 67 |


மை

| | | |
|---|---|---|
| கமலா வாசுகி | 4 கவிதைகள் | 70 |
| நவஜோதி | 2 கவிதைகள் | 74 |
| குட்டிரேவதி | 4 கவிதைகள் | 77 |
| தர்மினி | 4 கவிதைகள் | 81 |
| மலரா | 5 கவிதைகள் | 84 |
| பெண்ணியா | 5 கவிதைகள் | 88 |
| குமுதினி தங்கராஜா | 1 கவிதை | 93 |
| கற்பகம் யசோதர | 4 கவிதைகள் | 94 |
| உதயச் செல்வி | 1 கவிதை | 100 |
| சத்தியா சத்தியதாஸ் | 1 கவிதை | 102 |
| அரங்கமல்லிகா | 1 கவிதை | 105 |
| சுகிர்தராணி | 4 கவிதைகள் | 107 |
| தில்லை | 2 கவிதைகள் | 111 |
| மரியா என்டனீற்றா | 2 கவிதைகள் | 113 |
| சமீலா யூசுப் அலி | 2 கவிதைகள் | 116 |
| சலனி | 3 கவிதைகள் | 118 |
| மாதுமை | 4 கவிதைகள் | 122 |
| வைகைச்செல்வி | 1 கவிதை | 127 |

## நினைவு:

1994 ஏப்ரல் 7 இலிருந்து யூலை வரையான நூறு நாட்களில் சுமார் 8 இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்களைக் காவுகொண்ட ருவண்டா படுகொலையின் 13வது வருடத்தை நினைவுகொள்வோம்.

ஆழியாள்
அவுஸ்திரேலியா

## வீடு

எனக்கோர் வீடு வேண்டும்
நாலு சதுர அறைகளும் (10‘X10‘)
நன்நான்கு மூலைகளும்
நீள்சதுர விறாந்தைகளும் அற்றதோர்
வீடு வேண்டும் எனக்கு.

என்னைச் சுழற்றும் கடிகாரமும்
என்னோடே வளரும் சுவர்களும்
சுற்றி உயர்ந்து இறுகிய கல்மதில்களுமற்றதோர்
வீடு வேண்டும் எனக்கு.

பூட்டற்ற கதவுகளுடன்,
சாத்த முடியாத யன்னல்களுடன்
எப்பக்கமும் வாயிலாக
வீடொன்று வேண்டும் எனக்கு.

குளிரில் கொடுகி
வெயிலில் உலர்ந்து
மழையில் குளித்து
காற்றில் அசைந்து -என் பூக்கள்
பறந்து பரவசம் எய்த

ஒரு வட்ட வட்ட வீடொன்று வேண்டும் எனக்கு
வானத்தின் வளைவுடன். ○ஆழியாள்

# பெருமடி

கடற்கரைகளில்
எவ்வாறெல்லாம் புதைத்திருக்கிறோம்
இரகசியங்களை.

விரல்களால் கீறி அழித்தவையும்
காற்பெரு நகத்தால் நிமிண்டிப் புதைத்தவையும்
கால் நனைக்கையில் பாதத்தூடு நழுவிப் போனவையும்
மணற்கோட்டையாய் எழுந்தவையும்
தோண்டிய குழியுள் விழுந்தவையும் என
எத்தனை இரகசியங்களைப்
புதைத்திருக்கிறோம் கடற்கரைகளில்!
எத்தனையைக் கரைத்திருக்கிறோம் இக் கடல்நுரைகளில்.

ஆனால்
கடலின் பெருமடியோ வாஞ்சை மிக்கது,
மிக வாஞ்சை மிக்கது.

இரைச்சலில்
நம் காதுகளுக்கெட்டாத வாக்கியங்களின் கருணையையும்,
கரிக்கும் உப்புக்காற்றில்
காதலர் மென்று விழுங்கிய அழகிய சொற்களையும்,
பிரம்ம ரகசியமாய்க் கோர்த்து வைத்திருக்கிறது அப் பெருமடி.

ஒவ்வோர் நாளினது கடைநுனியிலும்
நம் ஒவ்வோரது ஒவ்வொரு ரகசியமும்
உயிர் பெற்று எழுகிறது
சினை பொதிந்த ஓர் வெள்ளி மீனாய்
ஓர் கடற்பாசித் தாவரமாய்
ஓர் பவளப் பூப்பாறையாய் உருக்கொண்டு.

ஆமாம்
கடலின் பெருமடியோ வாஞ்சை மிக்கது,
மிக வாஞ்சை மிக்கது.

மீளவும் மற்றுமொரு புதிய நாளின் விடியலில்
ஹோ... ஹோ... ஹோவென
மேலும் இரகசியங்கள் பல வேண்டி
ஆர்ப்பரித்துப் பாறைகளில் மோதிச் சிதறுகிறது கடல்.
கரையொதுங்கும் அலைகளுடு
தவிப்பாய்க் காத்திருக்கின்றனர் கடற் கன்னியர்
நம் இரகசியங்களைக் கடல் சேர்த்து உயிர்ப்பிக்க.
○ஆழியாள்

## கி.பி 2003இல் தைகிரீஸ்...

என் மடியில்
வாட்டிய பாண் துண்டுகளுடன்
அமர்ந்திருந்தது ஒரு கோப்பை.
ஆசுவாசமாய் அருகே
தன் ஆவியைப் பறக்க விட்டபடி
சிறு கோப்பிக் கிண்ணம்.

விடிகாலைச் செய்திகள்
தொலை நிழலாய்
சுருள் அவிழ
தூரத்துப் பார்வையில்
தைகிரீஸ் நதிக்கரையைப்
பார்த்திருந்தேன்.

ஊடறு கவிதைகள்

இருண்முகிலாய்ப் பிரண்டெழும்
புகைமூட்டத்துள்
உலகத்துக் கடவுளரெலாம்(?)
ஒற்றுமையாய் வந்தாற்போல
சோதிப் பெரும் பிரகாசத்தில்
ஊனக்கண் கெடப் பார்த்திருந்தேன்.

அசரீரிகளின் ஒலித்தெறிப்பில்
செவிப்பறைகள் அதிர்ந்து நோக
மேலும் பார்த்துக் காத்திருந்தேன்.

கிட்டவே இப்போது மிகக் கிட்டவே
தெரிகிறது தைகிரீஸ் நதிக்கரை.

அங்கு காலகாலமாய்க்,
காலம் தன்னில் கதைகளை கிறுக்கிச்
சென்ற கைகளை
உயர்த்தி மேலே பிடித்திருந்தது
மெசப்பத்தேமியா

அதில்
பதாகையேதும் தெரியவுமில்லை,
இருக்கவுமில்லை.

சுருங்கிய வெறுங்கைகளே
வெம்பி அல்லாடிச் சொல்லப்
போதுமானதாய் இருந்தன
வேண்டாம் போர் என்று.

கண்கள்
கரும்பிணம் மிதக்கும்
சிறு குட்டைகளாய்
கலங்கிக் குழம்பித்
தெளிவுற முயல

காலியாய்க் கிடந்தன
கோப்பையும்
கிண்ணமும். ○ஆழியாள் 2007

# கலாச்சாரம்

நேர்கோட்டுக் கூட்டங்கள்
உருவமைத்த
அடுக்குமாடிச் செவ்வகங்களும்
கூரை முக்கோணங்களும்
நீலத்தில் அளைந்து கரையும்
பார்வைகளுக்கு ஓர் இடையூறாய்
கண்ணாடி யன்னல்களும்.

அறையுள்
இயந்திரச் சலிப்புடன்
நேர்கோடு வரைந்து வைத்த
ஆதாரத் திண்மங்களாய்
மேசை, தாள் கோப்புப் புத்தகங்களோடு
விடைத்த அவன்.

திட நிலைச் சுவர்கள்
நாலு மூலைகளில் நெட்டையாய்க் குந்தியிருந்தன.

இருத்தலின்
சுவாரசியம் அருக
அடைபட்ட நிலைக்கதவின்
பிடிதனை வளையத் திருகித்
திறந்த போது
சிரித்துக் கலகலத்துப்
பேர் வெள்ளமாய்க் கரை உடைக்கும்
புகுந்த
நேர்கோட்டிற் பயணமுறா ஒளிக்கற்றைகள்.
○ஆழியாள் 2007

ஆழியாள் அவுஸ்திரேலியா

## பருவ காலங்களை சூடித்
## திரியும் கடற்கன்னி

கடற்கன்னி பாடுவதை
யார் கேட்டிருக்கிறீர்கள்
அபரிமிதமான ஆற்றலோடு தொடங்கும் பாடல்
இருகரைகளில் எதிரொலித்து
துறைமுகங்களைத் தாண்டி விழுவதை
அதிகாலை உறக்கம் கலைந்த படகோட்டி
மதுநெடியுடன் பிதற்றுகிறான்
கடற்கன்னியின் சொற்கள்
குறையாமல் விளைந்த வண்ணமிருக்கின்றன
கரைமணலில் சிறுமிகளின்
மடிகொள்ளாத வெண்சிப்பிகளாக
நடுக்கடலில் நங்கூரமிட்டிருக்கும் கப்பல்களில்
மாலுமிகளின் தனியறைகளில்

ஊடறு கவிதைகள்

கடற்கன்னியின் வாசனை வியாபித்து
திரைச்சீலைகள் படபடக்கின்றன
அவளின் நீண்டு நெளியும் வால் வசீகரிப்பினை
படர்பாசிகளின் கீழிருந்து வெளிவரும்
மீன்குஞ்சுப் பட்டாளங்கள்
பிரயாசையுடன் பின்தொடர்கின்றன
அடர்த்தியான பச்சைநிற பளபளக்கும் செதில்கள்
நீர் அல்லிகளின் வேர்களைப் பின்னி
பௌர்ணமியில் இன்னுமதிகமாய் ஜொலிக்கின்றன
கற்படுக்கைகளிடையே சுழியோடிகள்
அவளது கண்களின் கவிதைகளைக் கண்டெடுத்து
ஆராய்ச்சிக் கூடங்களுக்கு எடுத்துச் செல்கின்றார்கள்
நள்ளிரவில் கடற்கன்னி
மேகங்களை வேட்டையாடுகிறாள்
அவற்றை வழுக்கும் பவளப் பாறைகளிடையே பதுக்கி
வைத்து
ஜெலி மீன்களை ஏமாற்றுகிறாள்
சீறியெழுந்து நட்சத்திரங்களை ஆய்ந்துகொண்டு
நீருக்குள் நழுவும் அற்புதத்தை
தாம் மாத்திரமே பார்த்தபடியிருக்கின்ற கருங்கற் பாறைகள்
தம்மை அறியாமலேயே உருகிக் கொண்டிருக்கின்றன
உப்பின் காரநெடி காந்தும் அவளது நடனம்
அலைகளின் பயணங்களாய் ஓயாது நிகழ்கின்றது
மின்னல்கள் கூக்குரலிட்டுக் கூவிவெடிப்பதெல்லாம்
கடற்கன்னியின் பெயரைத்தான் என
மலைவாசிகள் நம்புகின்றார்கள்
புராதனகால கடல் அரக்கனின்
தந்திரோபாயங்களை தோற்கடித்தபடியே
பருவ காலங்களை அருளும் கடற்கன்னி
ஒவ்வொரு கடலினிலும் நீந்திக் கொண்டே இருக்கிறாள்
பெருகும் தன் ஆற்றலின் பிரவாகத்தைப் பாடிப்பாடி.

○அனார்

ஊடறு கவிதைகள்

# மேலும் சில இரத்தக்குறிப்புகள்

மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்து
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக் கொண்டு
அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப் பதறுகின்றேன்
இப்போது தான் முதல் தடவையாக காண்பதுபோன்று
‘இரத்தம்’ கருணையை, பரிதவிப்பினை
அவாவுகின்றது
இயலாமையை வெளிப்படுத்துகின்றது
வன்கலவி புரியப்பட்ட பெண்ணின் இரத்தம்
செத்த கொட்டுப் பூச்சியின் அருவருப்பூட்டும் இரத்தமாயும்
குமுறும் அவளுயிரின் பிசுபிசுத்த நிறமாயும்
குளிர்ந்து வழியக் கூடும்
கொல்லப்பட்ட குழந்தையின்
உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்
மிக நிசப்தமாக
மிக குழந்தைத்தனமாக
களத்தில்
இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்
அதிக இரத்தத்தை சிந்த வைத்தவர்கள்
தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்
பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்
சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும் சுவர்களில்
மன்றாடும் மனிதாத்மாவின் உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன
வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்
கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறது ○அனார்

## பிச்சி

திருடனின் பார்வை
வீரனின் மிடுக்கு
உள் நுழைந்தது பாம்பு
உடல் வாசனை கமழும்
அறைக் கண்ணாடியில் பாம்பின் கோடுகள்
ஆதி மந்திரமாய் உறைகின்றன
கடல் திறக்கும் கள்ளச் சாவிகளென
பத்து விரல்கள்
நிலவு நனையும் உயரத்தில்
தெறிக்கின்றது மா கடல்
மரம் முழுக்க கனிகள் குலுங்கும்
உச்சாணிக் கொம்பில்
மயக்கி படமெடுத்தாடுகிறாய்
பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை
புலன்களை ஸ்பரிசிக்கின்றது
புற்றிலிருந்து வெளியாகின்றேன்
காற்றின் அதிர்வுகளில்
பளிச்சிடுகிற மயக்க இழைகள்
விரிகின்றன ஒவ்வொன்றாய்
குளிர்ந்து, இறுகப்பற்றி
உதடுகள் தீட்டுகின்ற மாயத் திசையில்
பனிப்பறவைகளின் குலாவுகை
கனவின் கத்திகள் பாய்ந்த கவிதையை
ருசிக்கின்றோம் மிச்சம் வைக்காமல்
வானம் பூனைக்குட்டியாகி
கடலை நக்குகின்றது ○அனார்

ஊடறு கவிதைகள்

# மின்னல்களைப் பரிசளிக்கும் மழை

மழையாய்ப் பெய்து குளிர்ந்தன
எனக்குள் உன் பேச்சு
மழை தொடும் இடங்களிலெல்லாம்
ஈரச்சிதறல் தெப்பம்
புதிர்மையை மொழிபெயர்ப்பது போன்று பொழிகின்றாய்
ஓயாத பரவசமாய்
கோடை மழை
பின் அடைமழை
அளவீடுகளின்றி திறந்துகிடக்கும் இடங்கள் எங்கிலும்
பித்துப்பிடித்து பாட்டம் பாட்டமாய்
மழை திட்டங்களுடன் வருகின்றது
ஒவ்வொரு சொல்லாகப் பெய்கின்றது
தாளமுடியாத ஓர் கணத்தில் எனக்கு
மின்னல்களைப் பரிசளிக்கின்றது
அது அதன் மீதே காதல் கொண்டிருக்கிறது
எப்போதும் மழையின் வாடை உறைந்திருக்கும்
ராஜவனமென
பசுமையின் உச்சமாகி நான் நிற்கிறேன்
வேர்களின் கீழ் வெள்ளம்
இலைகளின் மேல் ஈரம்
கனவுபோல் பெய்கின்ற உன் மழை ○அனார்

# கரப்பான்களின் தொல்லை

கரப்பான்களின் தொல்லை
எவ்விடமும்
எக்காலமும்
எல்லோரிடமும்.
சகித்துக்கொள்ள முடியாமல்
இரசாயன அணு ஆயுதங்களுடன்
தாக்குதலைத் தொடர்ந்த போது
தெரிந்தது
ஓரிடத்தில் குவிந்திருந்த கரப்பான்கள்
ஊரெல்லாம் பரவி
வெவ்வேறு பெயர்களில்
ஊர்ந்து கொண்டிருப்பது.

செங்கல் சுவர்களை இடித்து
பளிங்குக் கற்களைப் பதித்து
இடைவெளி இல்லாமல்
அடுக்கிவைத்து
நிமிர்ந்து போது
கரப்பான்கள் ஊர்ந்தன
கைகளிலும் கால்களிலும்.
துண்டிக்கவோ கண்டிக்கவோ
முடியாது என்பதால்
யுகம் யுகமாய்
உடம்பெல்லாம் மேய்கின்றன
கரப்பான்கள். ○புதியமாதவி

ஊடறு கவிதைகள்

# காதல் இருட்டு

1.

காதலைப் பற்றிய
உலகமகா காவியங்களைப்
பருகியப் போதையுடன்
தள்ளாடி
தலைகுப்புற விழுந்துகிடக்கிறது
தலைமுறை தலைமுறையாய்
எழுந்து நடக்க முடியாத
எங்கள் விடியல்கள்.

புல்லின் நுனியில்
மலர்ந்த பனித்துளியில்
ஊஞ்சலாடும் காதலிருட்டு
எப்போதும்
காணாமல் போய்விடுகிறது
யோனியும் முலைகளும்
தேடித் தேடி
பாறைகளின் இடுக்குகளில்
படரும் வெளிச்சங்களைக் கண்டு.

எது உங்களிடம் இல்லையோ
எதை நீங்கள் எவருக்கும்
தரமுடியாதோ
அதைப் பற்றியே
காலம் காலமாய்
எல்லா மொழிகளிலும்
எழுதி எழுதி
இன்னும்

எத்தனை யுகங்கள்
எங்கள் கனவுகளை மயக்கி
முயங்கித் திரிவீர்கள்?

2.
ரம்பை ஊர்வசி
இந்திராணி
அந்தப்புரத்தை அலங்கரிக்கும்
ஆயிரம் தேவதைகள்
இருந்தும் கூட
எப்போதும் அகலிகைகளின்
அல்குல் தேடி
அலைகிறது
தேவலோகத்து
இந்திரனின் வச்சிராயுதம்.

கிழிந்த யோனிகளுடன்
பிணமாக மல்லாந்து கிடக்கும்
மண்ணின் வேர்களைப் பிழிந்து
தாகம் தீர்த்துக் கொள்கிறது
இந்திரனின் வெள்ளையானைகள்.

கல்லாக இருக்கும்போது
காதலாகி கசிந்துருகிய
அகலிகையின் முலைப்பாலிருந்து
விஷம் கலந்து வடிகிறது.
சாபவிமோசனம் கொடுத்தனைச்
சாகடிக்கும் நாட்களுக்காய்
காத்திருக்கிறது
மனித வெடிகுண்டுகளைப்
பிரசவிக்கும் அகலிகையின் யோனி. ○புதியமாதவி

## எங்கள் ஆட்டம்

ஏணிகளும் பாம்புகளுமாய்
எந்த வரையறையுமின்றி
கட்டங்களை நிரப்பியிருக்கிறது
காலம்.

இரண்டு கேட்டு
ஏறிய சுகத்தை
நான்கு கொடுத்து
நாகம் கடிக்க
இறக்கிவிடுகிறது
எப்போதும் காய்கள்.

மீண்டும் மீண்டும் அடிபட்டதால்
இரத்தம் சொட்டும்
காயங்களுக்கு

ஊடறு கவிதைகள்

மயிலிறகால் தைலம் தடவி
ஆட்டத்தைவிட்டு
அவுட் ஆக்காமல்
சுற்றிச் சுற்றி வருகிறது
காய்கள்.

ஆட்டக்களத்தில்
ஏணிகளை குறிவைத்து
ஏறத் தெரிந்தவர்கள்
மிகவும் உயரத்தில்.

எத்தனையோ
போராட்டங்களில்
அடிபட்ட காயங்களுடன்
உயர உயர ஏறிய
காய்களை
கடைசி நேரத்தில்
கடித்துக் குதறி
அடித்து வீழ்த்துகிறது
ஏறுவதற்காகவே
வரையப்பட்டிருக்கும்
ஏணிகள்.

பாம்புகளுடன் வரையப்பட்டிருக்கும்
கட்டங்களைவிட
ஏணிகள் அதிகமிருக்கும்
கட்டங்களைக் கண்டே
தலைமுறை தலைமுறையாய்
அஞ்சி நடுங்குகிறது
இரத்தம் தோய்ந்த
காலங்களைப் பிரசவிக்கும்
கருப்பைகள். ○புதியமாதவி

ஊடறு கவிதைகள்

# எங்கள் நிலவு

நியோன் வெளிச்சத்தில்
நட்சத்திரங்களின் மரணத்திற்காய்
நித்தமும் அழுகிறது
மாநகரத்தின் மனித நிலவு.

எப்போது வேண்டுமானாலும்
எந்த இடத்திலிருந்தும்
ஏவப்படலாம்
நிலவை எரிக்கும்
ஏவுகணைகள்.

ரூபாயை டாலராக்கும்
சதுரங்க ஆட்டத்தில்
ராணிகளை விலைபேசி
காய்நகர்த்தும் சிப்பாய்கள்.

ஆயுத பேரங்களின்
சோதனைக் கூடமாய்
நிரம்பி வழிகிறது
பிணவறைக் கிடங்குகள்.

எதைப் பற்றியும்
கவலைப்படாமல்
எப்போதும் போல
விழித்து உறங்கி
உறங்கி விழித்து
வந்து போய்கொண்டிருகிறது
வாசலில் சூரியன். ○புதியமாதவி

# கட்டாயக் கண்ணீர்

என் பிஞ்சுக் கைகள்
நெஞ்சோடு பிணைத்திருந்த
இரும்புக்குழாய்கள் கனத்தனவா
இல்லை,
இதயம் கனத்தது

பஞ்சுத்தலையணையில்
படுத்துறங்க வேண்டிய
பதின்ம வயதின் ஆரம்பம்
கரகரத்த தரையில்
கை ஊன்றி சரிந்திருக்கிறேன்
கனக்கின்ற குண்டுகளைச் சுமந்த படி
எல்லைகளில் காவல் இருக்கிறேன்

படித்து நான் பெற வேண்டிய பட்டங்கள்
எனக்கினி இல்லையென்று உறுதியாயிற்று
என் தங்கைக்குப் போட்டியாய்
சண்டை பிடித்தபடி
நான் அழுது முகம் புதைத்த
தாயின் மடி தூரமாயிற்று

என் கண்ணீர்
கண்ணில் இருந்து தான் வழிகிறது
என் தாயின் கண்ணீர்
நெஞ்சிலிருந்தல்லவா வழிகிறது

என் காயங்களிலிருந்து
இரத்தம் வழியும் போதெல்லாம்
அவள் கண்களிலிருந்து இரத்தம் வழியும்

ஊடறு கவிதைகள்

என் துப்பாக்கிகள்
நெருப்பைக் கக்கும் போதெல்லாம்
கொலைகாரனைச் சுமந்ததாய்
அவள் உதிரத்திலிருந்து தீ வழியும்

நான் விடுதலைக் கவிதைகளை
எழுத்துக் கூட்டிப் படித்துக் கொண்டிருக்க
அவள் என் பழைய பள்ளிப் புத்தகங்களை
என் நினைவாய்ப் புரட்டிக் கொண்டிருக்கிறாள்

அவளை நோக்கி
என் கால்கள் திரும்பும் போதெல்லாம்
கடிவாளங்கள் என்னைச் சிறையிடும்

கண்மூடி விழிக்க முதல்
கட்டாயத் தியாகியாய் நான்
என்னை இழப்பதற்கு
தயாராகியபடி அவள்

எறிகணைகளின் வெளிச்சத்தில்
இருட்டினில் எதையோ தேடும் படி
என்னுள் திணிக்கப்பட்ட தீவிரவாதம்

இரும்புத் திரைகளின் பின்னால்
இரும்புக் குழாய்களைச் சுமந்தபடி
எனது விடுதலைக்கான பொய்யான ஆரவாரம்

மெய்யாய்த் துப்பாக்கிகள்
எப்போது பூப்பூக்கும்
என் தாயின் முகத்தில்
எப்போது இதழ்கள் விரியும்
என் கட்டாயக் கண்ணீர்
அப்போதே காய்ந்து போகும். ○மதனி

# உடன்படிக்கைகளும்
# உடன்பிறப்புக்களும்

இவர்கள்
வினோதமானவர்கள்.

இனவாதத்தை வேலிகளுக்கு அப்பால் புகைக்க
வைத்துவிட்டு
வீட்டினுள் தமக்குத்தாமே தீமூட்டிக்கொள்கின்றனர்

பகைவனாய் பலருக்குப் பட்டங்கள் சூட்டிவிட்டு
நண்பனுக்கும் முள்முடிசூட்டிச் சிரிக்கின்றனர்

அன்னை தந்தை இல்லை என்றான பின்னரே
அன்புப்பாடம் புகட்டி விடுகின்றனர்

அடுத்தவர் தலைகள் சரிந்த பிறகே
அதிகாரத் தாண்டவங்களை ஆரம்பிக்கின்றனர்

தங்களின் நாற்காலிக் கனவுகளுக்காக
அடுத்தவரை உறங்கச் சொல்கின்றனர்

வரட்சிகள் பரவிய பின்னரே
வாய்க்கால் வெட்ட நிலம் பார்க்கின்றனர்

பஞ்சநிழல் பூமியெல்லாம் படர்ந்த பின்னர்
எங்கோ ஓர் மூலையில் பயிர் வளர்க்கின்றனர்

சிலுவைகளை அணைத்தபடி
பிலாத்துவாய் பாத்திரம் ஏற்கின்றனர்

ஜோர்மனி

மதூனி

ஊடறு கவிதைகள்

மகுடங்கள் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே
அடிக்கடி மக்களை மட்டும் மனம்மாறச் சொல்கின்றனர்

இவர்கள் யாசிப்பதெல்லாம்
பிளக்கின்ற பூமியினூடே
பிறக்கின்ற உறவுப்பாலம்.

இவர்கள் யாசிப்பதெல்லாம்
பிரிவினை வேதம் ஓதுகையில்
சாந்தி தருகின்ற இரத்த வேள்விகள்.

இவர்கள் யாசிப்பதெல்லாம்
தங்கள் உறங்கா இரவிலும்
அடுத்தவன் உறங்காத, அவனுக்கு விடியாத இரவுகள்.

இவர்கள்
ஒரு மொழித் தாய்ப்பிள்ளைகள்
இவர்கள்
உடன்பிறப்புக்கள்
ஆனால்
உடன்படிக்கைகளுக்குப் பின்னர் மட்டுமே
உறவாடத் தயாராயிருப்பவர்கள்.

இவர்கள்
வினோதமானவர்கள். ○மதனி

# பதுங்கும் பரம்பரைகள்

அஞ்சு வயது மகனை
நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறேன்
அது தென்றல் தேடித்தீண்டிய
பஞ்சு மெத்தையிலல்ல
வேரின் மணம் வீசிக்கிடந்த
பதுங்குகுழியில் தான்

பசித்த வயிற்றினை ஏமாற்றி
பாதியாய்க் கைகழுவி
ஒளித்துக் கொள்ளவும்
அரைக்கண்ணை மூடி
அயர்ந்த பொழுதிலும் திடுக்கிட்டு
தேடி ஒதுங்கவும்
இது மண் மாளிகை
எங்கள் பாதி நாளையும்
பாதி இரவையும்
அடிக்கடி பங்கு போடும்
புகலிடம்

'இறந்தபின் தான் மண்ணுக்குள்'
இந்த வார்த்தைகளைப் பொய்யாக்கி
வாழ்வதற்காகவே அடிக்கடி
இப்போது நாம் மண்ணுக்குள்.
உயிர் துறந்த பின்
என்னைப் புசிக்கப் போகும் புழுக்களோடு
இப்போதே புரிந்துணர்வுச் சந்திப்புக்கள்

உலோகச் சேர்க்கைகளின் சக்தி
என் ஊரை அதிர வைத்துக் கொண்டிருக்க
உள்ளுக்குள் என் உணர்வுகளும்
சிதறி, பின் சிந்திக்கும்

அராஜகமும் அரசியலும்
பறந்து திரிந்து பணம் மாற்றி
செயற்கையாய் ஆயுதம் செய்து

மதனி ஜோர்மனி

ஊடறு கவிதைகள்

எதிரியின் இயற்கை வளம் கைப்பற்றி
இடக்கையால் சண்டையைத் தூண்டி
வலக்கையால் சமாதானம் பேசி
சந்தர்ப்பவாதிகளாய்
சந்தித்துக் கை குலுக்கினர்
எறிகணைகளாய்
என் வீட்டுக்கும் எரிமழை அனுப்பினர்
நான் மண்ணால் குடை பிடித்தேன்

பத்து வருடங்கள் கடந்த பின்
நான் மட்டும்
என் கரையும் கண்ணீர்
பூமியை நனைக்க தனித்திருப்பேன்

என் மகன்,
நாட்டின் ஏதோவொரு மூலையில்
இன்னொரு கிடங்கிலிருந்து
எதிரிக்கு குறி வைப்பான்
மீண்டும் என் பரம்பரை
அடிக்கடி புலம் பெயரும்
குழிகளில் ஒதுங்கும்
மண்ணுக்காய் சண்டையிடும்
முடிவில் மண்ணை உண்ணும்

ஆனால்...
பளிங்குத்தரைகளில் நடப்பவர்கள்
தொடர்ந்து பறப்பர்
பண்டமாய் பிணம் மாற்றுவர்
தனித்தே தீர்மானிப்பர்
தமக்காய்ப் போரிட
எங்கள் மகன்களை அழைப்பர்
நாங்கள் தனித்திருப்போம்
அவர்கள் களித்திருப்பர்

வெளியே குண்டு நிலவெறிக்கும்.
குழியில்
நாங்கள் மெழுகுகளோடு மெழுகாய். ○மதனி

ஊடறு கவிதைகள்

(இரு தலைப்பிலிக் கவிதைகள்)

# 1.

சாதி இனம்
மதம் பகை
ஏதாவதொரு பெயரில்
எம் உடல்கள்
காலந்தோறும்
போர்க்களமாயின

காயங்கள் நாறும்
முலைகள் தோறும்
சிதைவுற்றழிந்த
கருப்பைகள் தோறும்
எமது மானுடத்தின்
வெற்றிக்கும் தோல்விக்குமான
குருதி தோய்ந்த
கொடித்தடங்கள்

போரில்
காணாமல் போன
தலைகளில் எல்லாம்
பறிக்கப்பட்ட பூக்களின்
நீண்ட முடி

ஆயுதங்கள்
தீரும் பின்

யோனிகளற்றுப் போகட்டும்
பிரபஞ்சம்
வேட்டையாடுவதற்கும்
வேட்டையாடப்படுவதற்கும்
எந்த உயிருமின்றி
இடுகாடாகட்டும்! ○லீனா மணிமேகலை

## 2.

அவ்வப்பொழுது நீ
என்னிடம் ஏற்படுத்தும்
மௌனம்
கனத்த புயலென
கர்ச்சிக்கின்றது

எதையோ
உடைத்து
உடைத்துப்
பெருக்கெடுக்கின்றது

உன்னை
என்னை
நம்மைப்
பற்றிய
சந்தேகங்களை
அடித்துச் செல்கின்றது
சுவடில்லாமல்

பின்னொரு கணத்தில்
வடிந்த கண்ணீர்த் துளி
எழுப்புகின்றது
களங்கமில்லாத
புதிய அத்தியாயத்தின் வாசத்தை.

○லீனா மணிமேகலை

## ஒன்றுக்கு ஒன்று

ஒரு விதிக்குள் அடங்கல் என்று,
இரு புனித நதிகளின் சங்கமமென்று,
பெரும் உடல் நல முடிவிதுவென்று,
உருவான எழுதாத சட்டம் அன்று.

பதித்தனர் திலகமிடும் புனித வார்த்தைகள்,
ஒருத்திக்கு ஒருவன், ஒருவனுக்கு ஒருத்தி.
திருத்தச் செயலுடையோருடன் பொருத்தம்.
விருத்தியுளப் பங்காளியுடன் மிகப் பொருத்தம்.

உருத்து உண்டு ஒரு நல்லுரிமைக்கு.
யாருக்கு வெறுப்பு! மறுப்பும் இல்லை.
சேரும் இரு பொருந்திய மனங்களுக்கு,
ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்!

வருத்தம் தினம் தரும் வன்முறையாளருடன்,
திருத்தவியலாத ஒரு மனச்சீக்காளியுடன்,
பொருத்தமற்ற பொல்லாத ஒரு பங்காளியுடன்,
அருத்தமில்லா அமில வார்த்தையிது.
○வேதா இலங்காதிலகம்

# தடம் தீட்டு

கண்களில் அறிவை விரி பெண்ணே!
கண்ணுள் பயத்தை ஒழி பெண்ணே!
காலடிப் பதிவில் உரம் காட்டு!
நேரடி எடுத்துத் தடம் தீட்டு!
இல்லறப் பணிமனைக் கந்தோரின்
இயக்குனர் நீ தான், அடிமையல்ல!
நயக்கும் சேவை வீட்டினுள்ளும், மெல்ல
நானிலமெங்கும் நகர்த்திடு, வெல்ல!
கண் அவன் கைகளில் அகப்பட்ட
பெண் எனும் சித்திரப் பாவையாகாது,
வன்முறை வாழ்நாட் கைதியாகாது,
கண்களைத் திறந்திடு! காவியம் படைத்திடு!
முகிலிற்குள்ளும் நுழைகிறாள், விழித்திடு!
அகிலத்தை ஆய்வு செய், அகத்திணையோடு!
முகிழும் ஞான விரியலில் நம்பிடும்,
மூட நம்பிக்கைக் கருமுகிலைத் தீய்த்திடு!
○ வேதா இலங்காதிலகம்

# மீட்பர்களைத் தேடியபடி

குரல் வளையில் உயிரின் கடைசிச்சொட்டு
பிரிவது போல் தோன்றும் - ஆயினும்
மீண்டும் உயிரோடு போராடிடும்
அவஸ்தையான அந்தப் பொழுதுகள்

நீண்ட அழகிய விரல்கள்
நித்தமும் சித்திரவதையில் நீராடி
கூண்டுக்குள் தடுமாறி மீளும்
மறக்கமுடியாத அந்தப் பொழுதுகள்

உணவுகள் ருசித்து உண்ட
நாக்கின் பரப்புகள்
இம்சைகளின் நெருடல்களில்
வலிகளை சுமந்து கொண்ட
குரூரமான அந்தப் பொழுதுகள்

இன்னும் எத்தனையோ இதயத்தின் இடுக்குகளில்
கொதித்துக் கொண்டிருக்கின்றது.
தணலாகித் தணலாகி
எரிமலையொன்றை உருவாக்கிக் கொண்டே
என் உயிர் இங்கே

மௌனித்திருக்கும் இந்த இரும்புக்கம்பிகளுக்கும்
மௌனித்திருக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்த
நியங்களை கூறிட முடியாது
சிறைக் கம்பிகளுக்குள் சிறகு முளைக்காத பறவையாய்
மீட்பர்களைத் தேடியபடி நான். ○சுகந்தி சுதர்சன்

# தாயம்

கன்னிகளின் தலையில் வெள்ளி மலர்கள்
அள்ளி விளையாடுகையிலும்
பொன்போல் மின்னும் தங்கமாய் இன்னும் நீ!

சீதனமே ஆடவர்களின் உடன்பிறப்பா நீ - இல்லை
அவர்களின் சக ஊழியனா?

பெண்களின் வாழ்வில்
நீ தாயம் விளையாடுகிறாய் - அதனால்
அவர்கள் மனதிலே ஏற்படுகிறது காயம்

சாதகத்தை எத்தனை நாளைக்குத் தான்
நீங்கள் சூடிக்கொள்வீர்கள்
செவ்வாயையும் சனியையும் எத்தனை நாளைக்குத்தான்
மாட்டிக் கொள்வீர்கள்
தோஷமென கன்னிகளை வாட்டியெடுப்பீர்கள்

மனங்களின் மொழிகள் இணைகையில்
நகைகளின் தொகை எதற்கு?
சிந்தனை வேர்களுக்கு
தன்மானம் என்னும் நீரூற்றி
சந்தனமாய் வாழ்வை ஆக்குங்கள்! ○சுகந்தி சுதர்சன்

## மூடிய அறை

ஒரு நீண்ட பகலின்
ஒளியில் குளிக்கும் கட்டிட வெளிப்புறம்.
பகலே இரவாய்ப் பூட்டிக்கிடக்கும்
இருண்ட அறை.
சொல்வது தீர்ந்து தீர்வே சொல்லாய்
உருக்கிய சுயம்-
சொற்களின்றி சுத்த மௌனமாய் பூட்டிய அறை.
மெல்ல அசையும் பூனையின் காது
இருளில் தெரியும் எதுவோ போல
காற்றில் அசையும் கயிறும் கூட
கண்ணாடியின் முன் உயிராய்த் தோன்றும்.
அமைதியும் இருளும் தியானமாய்ப் போக
நினைவை நின்று அழிக்கும் மௌனம்.
மெல்ல அசையும் திரையின் இடுக்கில்
விழிந்து சிதறும் வெண்மணி வெளிச்சம்.
தோற்றம், தெளிவு, சுவாசக் கறையென...
வெளிச்சக் கீற்று விரசம் பயில
தியானம் தொடரும்
உலகை நோக்கி. ○மோனிகா

## எல்லாம் வல்ல..

பரீட்சைக்கு உட்கார்ந்தேன்
வாத்தியார் சொன்னார் எல்லாம் வல்ல...
வேலைக்குக் கிளம்பினேன்
அம்மா சொன்னாள் எல்லாம் வல்ல...
வாய்ப்பாடு நினைவில்லை
வழியெல்லாம் எல்லாம் வல்ல...
காலி இடமெல்லாம் கட்டடங்கள்
எல்லாம் வல்ல...
இடுகாட்டிற்கிடமில்லை
பொசுக்கிடுவோம் எல்லாம் வல்ல...
இல்லமே இல்லையென்போர்
என்ன செய்வார் எல்லாம் வல்ல...? ○மோனிகா

# முலைகளும் இறகுகளும்

வாழ்வின் இரகசியங்கள் பொதிந்த
நம் பொய்கையில்
நடுங்கியது ஆகாயம்
நாட்டமின்றாடியது நித்திலம்.

ஊடுறும் தனிமையின்
உண்மைகள் பொய்த்ததன் அழகில்
இலைகள் ஆமையாக
ஆமைகள் இலையாய்த் திரிந்தன.

தரையற்றுத் தகிக்கும்
தர்க்கக் கடவுளின் கானற்
தீத் தாகத்தில் திறமின்றித்
தளர்ந்தோம் நாம்.

கற்பனைப் பகைவனை
முட்டித் தள்ளிக் கொண்டு
முகட்டின் விளிம்பில்
மூச்சு வாங்க நின்ற நான்,
கேட்டேன் உன் கடைசி கேள்வி என்னவென்று?

நீ கேட்டாய்,
'சுகமாக இருக்கிறாயா?'
என்றுன் காதலிடம்.
நான் சொன்னேன்,
கேள்விகள் கேட்பதே என் கடைசி
காதல் என்று.

மனிதனின் பலம் கேள்விகளிலென்பதும்
பலவீனம் பதில்கள் தேடுவதிலென்பதும்
எனது நம்பிக்கை.

தேடித் தொலைத்துக் கொண்டிருக்கிறோம்
நம் காதல்களை, கடவுளர்களை, கேள்விகளை
என் பாரமுற்ற முலைகளுக்கும்
உனது எல்லையற்ற இறகுகளுக்கும் ஊடே. ○மோனிகா

அமெரிக்கா

மோனிகா

# உடலைத் தவிர்த்து

உடலைத் தவிர்த்தென்ன உண்மை
வேண்டும் உங்களுக்கு.
அண்ணாசாலையின் ஆடை விளம்பர
அழகியின் உடலும்,
தேவியின் திரையில் தீண்டத் துடிக்கும்
திரைப்பட உடலும்,
தின்று தொலைக்கும் வறுகடலை
காகிதம் வரிக்கும் அந்த கவர்ச்சிப்
படமும் என்னுடலல்ல.

என் இனப் பெண் உடலுமல்ல
உரக்கக் கூறினால்...
அது வர்த்தகம், உலகமயம், குடும்பம்,
கலாச்சாரமென சங்கம் முதல்
தன் அங்கம் காட்டி மார்பு மதர்த்த
ஆண்மையின் உடல்.

அவனவன் நோக்க உண்மை
தெரியும் உம் அகக் கண்ணாடியில்.
கவிதையில் எழுத கற்பென்னவாகும்?
கழுதை.. இருந்தால் கதறும்
இருபாலும் வேண்டுமென்று. ○மோனிகா

# சரித்திரத்தை மாற்றிவிடு

மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவமும் வேணுமம்மா
மாதவமும் செய்து இந்த மண்ணுலகில் பிறந்துவிட்டால்
பெண்ணினமே பெற்றுவரும் இன்னல்களை இனங்கண்டு
மண்ணுலகை மாற்றிவிட இன்னுமென்ன தாமதமோ?

பிறப்பதற்கே உரிமையில்லை பிறந்தபின்னும் பெருங்கவலை
உரைப்பதற்கும் உரிமையில்லை
உரைத்துவிட்டால் பொறுக்கவில்லை.
இறப்பதற்கே பிறந்துவிட்டோம் இனியுமென்ன மனக்கவலை
உரக்கத்தான் பேசிவிடு உண்மையாக வாழ்ந்துவிடு.

அரசியலில் புறக்கணிப்பு ஆணுக்கென பெருமதிப்பு
அடக்கமே ஆடையாய் அணிவதிவள் பொறுப்பு.
பிரசவிக்கும் இயந்திரமாய் இவள் ஒடுக்கப்படும் தந்திரம்
மடக்கிப்போடும் மனிதருக்கு மரண அடி வந்திடும்.
கல்வியை நீ பெற்றுவிடு கண்திறந்து பார்த்துவிடு
கொள்கைப் பிடிப்புடனே கொடுமைகளைச் சாடிவிடு

எல்லை உனக்கில்லை எழுந்துநில்லு எதிர்த்துச் சொல்லு
தொல்லை தொலைதூரம் ஓடிவிடும் வாழ்வுவரும்.
முனைப்புடனே செயல்பட்டு முழுமையாய் முகிழ்த்துவிடு
முன்னேற்றப் பாதையிலே முழுமூச்சாய் விரைந்துவிடு

உனக்கென உண்டிங்கு உயர்ந்ததொரு தனித்துவம்
மனத்திடம் கொண்டுமுழு மனுசியாய் மலர்ந்துவிடு.
வீறுகொண்டு நடந்துவிடு விடுதலைத்தீ மூட்டிவிடு
சீறிவரும் சிங்கமெனச் சினந்துவிடு சீறிஎழு
சக்தியினைக் காட்டிவிடு சரித்திரத்தை மாற்றிவிடு -பதி
பக்தியென்று பதுங்கிடாமல் பாருலகை ஜெயித்துவிடு.

○பாமா

ஊடறு கவிதைகள்

# மானுடத்தின் மறுபாதி

ஆண்டவனின் உலகமிதை ஆர்வமுடன் எட்டிப்பார்க்க
ஆணுக்குத்தான் உரிமையுண்டு அகிலமே இதையறியும்.
கருவறையே கல்லறையாய் ஆனபின்னே பெண்ணுக்கு
அகிலத்தினுள் அடியெடுத்து வைக்கவழி இல்லையம்மா.
பெண்பிறந்தால் பெருஞ்செலவாம் ஆண் பிறந்தால் நல்வரவாம்
நாளைக்குத் திருமணச் சந்தையில்பெண் நல்லவிலை போக
காளைக்குத் கைநிறையக் கொடுத்துமாள முடியாதாம்
இன்றைக்கே கொன்றுவிட்டால் இவர்கள் துன்பம் தீர்ந்திடுமாம்.
தப்பித்தவறி அவள் தரணியிலே வந்துவிட்டால்
அப்பப்பா அடுக்கடுக்காய் என்னென்ன துயரங்கள்.
ஆண்களே ஆண்களுக்காய் ஆக்கிவைத்த உலகத்தில்
அல்லும் பகலும் இங்கே அடக்குமுறை ஆயிரங்கள்.
ஆணுக்காய் வாழ்வதுதான் அவனைச் சார்ந்து வாழ்வதுதான்
பெண்ணுக்குச் சுகமான சொர்க்கமெனப் பொய்யுரைப்பர்.
அடுப்பறையும் படுக்கையறையும் மட்டும்தான் பெண்ணுக்கு
கொடுப்பினையாய் தரப்பட்ட சொர்க்கங்கள் - இல்லை நரகங்கள்.
திரைப்படமும் இதனைத்தான் திரும்பத்திரும்பச் சொல்லுது
அரைகுறையாய் அவளைக் காட்டிப் பணங்காசு பண்ணுது
விளம்பரமும் விலக்கல்ல வேதங்களும் அப்படியே
பெண்ணிற்கு அழகு பேதமையாம்... சே வேதனைதான்.
விதவையென்று சொல்லுவார் - விஷவார்த்தைகளால் கொல்லுவார்
'வாழாவெட்டி' 'அமங்கலி' யென மொழியில்கூட வஞ்சனைதான்
மறுமணம் உண்டிங்கு மனைவி மரித்துப் போனால்
திருமணம் வேறுண்டோ கணவனிழந்த காரிகைக்கு?
தாய்மொழி என்றிடுவார் தாய்நாடு என்றும் சொல்வார்
வாய்கிழிய வார்த்தைகளை வாரி வழங்கிடுவார்
பாலியல் பலாத்காரம் பாரதத் திருநாட்டில்
காவல்நிலையங்களில் காவலரால் நடத்தப்படும்.
கடவுளின் பெயராலே கண்டகண்ட ஆசிரமம்
பிரேம ஆனந்தக் கூத்தாடும் போலிச் சந்நியாசம்
அத்தனைக்கும் மூலதனம் பெண்களின் உடல்தானே
எத்தனைநாள் பொறுப்பது எதிர்த்திடவும் வேண்டாமோ? ○பாமா

# ஒப்பாரி

வருசம் பொறந்தாலும் வகுத்தெருச்சல் தீரலியே
சிறுகச் சிறுகநானு சேத்துவச்ச அம்புட்டையும்
ஒருநாளு ராத்திரிலே ஓடச்செறுஞ்சு போட்டானே
படுபாவி போலிசு பாடையில போறவனே.
திங்காமெ உங்காமெ தெனஞ்சேத்து வச்சேனே
பீரோலுங் கட்டுலும் பிரியப்பட்டு எடுத்தேனே
பீரோலும் போச்சே பீரோலுக் குள்ள வச்ச
கொஞ்சநஞ்ச நகபணத்தக் கொலகாரன் எடுத்தானே.
அலுமினியச் சட்டிகள அடுச்சு ஓடச்சானே
அண்டாவ குண்டாவ ஓட்டையாக்கிப் போட்டானே.
வெங்கலப் பானைகள வெளங்கொண்டு நெளுச்சானே
வெறுவாக் கலங்கட்ட வெளங்காத போலிசு.
கத்திக்கொண்டு கட்டுல கண்டபடி ஓட்டையிட்டு
சுத்திநின்ன காத்தாடி லத்திகொண்டு அடுச்சொடுச்சு
கடன்வாங்கி வச்சபணங் களவாண்டு போனானே
களவாணி போலிசு கட்டையில போறவனே.
டி.வி. பொட்டிகளைச் செதறடுச்சுப் போட்டானே
பாவிப்பய போலிசப் பாம்புவந்து தீண்டாதா
ஆவியோட அங்கமும் நடுநடுங்க வச்சானே
காலிப்பய போலிச கடவுள் பாக்க மாட்டாரா.
சங்கர லிங்கபுரம் சட்டுனுகண் முழிக்குமடா
என்ன நீ செஞ்சாலும் எந்துருச்சு நிப்பமடா
சாக்குகள நெருச்சுநீ சங்காரம் செஞ்சாலும்
பொங்கியெழுவமடா போர்க்கொடியத் தூக்குவம்டா.

○பாமா

ஊடறு கவிதைகள்

(தலைப்பிலிக் கவிதை)

அடைமழையின் அமைதி
பெருமழையின் ஆக்ரோஷம்
அடிமனத்தின் ஆழத்தில்
ஆனந்தத்தின் ஆக்கிரமிப்பு
பள்ளிப் பருவத்தில்
பத்து வயதுச் சிறுமியாய்
துள்ளி வீடு வருகையில்
சில்லிடும் மழைத்துளிகள்
சிரம் நனைத்து முகம் வழிய
எங்குமிலாச் சந்தோசம்
பொங்கிவரப் பொங்கிவர
அம்மாவின் அதட்டலால்
அடங்க மறுக்கும் ஆசைகள்
முடங்கிக் கிடக்க மனமின்றி
தடைகள் பல தகர்த்தெறிந்து
தண்ணீரில் குதித்தாடிக்
கண்ணீரின் சுவடின்றி
காலங்கள் சென்றன

நேற்றைய மழையில்
முற்றிலும் நான் நனைந்து,
வீட்டினுள் நுழைந்தேன்
அம்மாவின் நினைவு
அடிமனதில் துக்கம்

ஊடறு கவிதைகள்

முந்தானை கொண்டு
முகந்துடைத்த அம்மாவின்
அடிவயிற்றில் முகம் அழுத்தி
அணைத்த அந்தச் சுகம்

கலைந்த முடி விரித்து
கவனமுடன் துடைத்து
கதகதப்பை ஊட்டும்
வெதுவெதுப்பை ஏற்றும்

முந்தானை முகர்கையில்
சந்தனமாய் மணக்கும்
அம்மாவின் வாசம்
அம்மாவின் சேலைக்கொரு
அலாதி வாசமுண்டு
இரவுகளில் உறங்கையிலே
இதமாக அவள் சேலை
முகத்தோடு மோதவிட்டு
முத்தமிட்டு, முத்தமிட்டு
நித்திரைக்குச் சென்றதுண்டு
நிம்மதியைக்கண்டதுண்டு
நான்கு பத்து வயதெனக்கு
ஈன்றபிள்ளை இரண்டு
இருந்தபோதும் இன்றும் என்
அருகில் அம்மா வேண்டும் -அவள்
சேலை வாசம் தேடும்
எந்தன் ஏக்கம் நாளும் கூடும்.

அவள்
சுவாசம் நின்றபோதும்
அவள்
வாசம் என்னுள் வாழும். ○பாமா

பாமா இந்தியா

ஊடறு கவிதைகள்

# அவள்

உழைப்பென்றால்
ஊதியம் உண்டு உயர்வுண்டு
குறிப்பிட்ட மணிநேர வேலை உண்டு
களைப்புண்டு
வார இறுதி இரண்டு நாள் ஓய்வுண்டு
நெருக்கடிகளை சமாளிக்க சங்கமுண்டு
உரிமைகளை வென்றெடுக்க போராட்டம் உண்டு
பார்போற்றும் புகழ் உண்டு
ஒன்றாய்க் கூட
தொழிலாளர் தினமுண்டு

ஓ! இவள்
சிந்தை எல்லாம் குடும்ப
உயர்வைத் தாங்கி
சிறப்பான வாழ்வமைக்க
சிந்தித்த பெண் இவள் -தன்
உயர்வை எண்ணாது

கரு மரங்களுக்குள்
வளைய வரும் இவள் -ஓர்
நடுநிசிப்பொழுதில் என்
கவனத்தை ஈர்த்தாள்,
குப்பி விளக்கில் குனிந்திருந்து
குவளைகள் விளக்கும் பெண்ணாய்

என்னை மறந்து
என் விழி கடிகாரம் பார்த்தது
ஓ! பன்னிரண்டு மணி

ஊடறு கவிதைகள்

பெருமூச்சை விட்டபடி
படுக்கை வந்தேன்

சயனித்து நெடு நேரம்
திடுக்கிட்டு எழுந்தேன்
அதிகாலை நான்கு மணி
வாளிச்சத்தம் நித்திரை கலைத்திருந்தது
திரை விலத்திப் பார்த்தேன்

நடு நிசியில்
குப்பி விளக்கில்
குவளை விளக்கிய பெண்
வாளி நிறைய நீர் நிரப்பி
போவது தெரிந்தது.
○ நளாயினி தாமரைச்செல்வன்

## புரியும் வேதனை

வேலையால் வந்து
கோலுக்குள் இருந்து
ரிவி பார்த்தபடி
அதிகாரம் செய்யும் கணவனே,
சற்று நேரம்
நீ மிதிக்கும் மனைவியாய் மாறு,
புரியும் வேதனை.

வேலைக்குப் போய் வா
சமைத்துப் போடு
சலவை செய்

ஊடறு கவிதைகள்

பிள்ளைகளைப் பராமரி
பாடம் சொல்லிக் கொடு
கத்திக் குதறும்
கணவனுக்காய்
நடுங்கு

கண்களைச் சுழற்றி
நித்திரை வந்தாலும்
வெளியில் போன
கணவனுக்காய்
நடுநிசி வரை
சாப்பாட்டுக் கோப்பையுடன்
காத்திரு

சோர்வு உடம்பைத் தாக்க
உணர்வு ஏதுமற்று
வர்ணனை செய்யும் கணவனின்
உடற்பசி தீர்த்து
ஜடமாய்த் தூங்கு.
காலை கண் எரிவுடன்
கண் விழித்து
அரக்கப் பறக்க
எல்லாம் முடித்து
வேலைக்குப் போ

வேலையால் வந்து
கோலுக்குள் இருந்து
ரிவி பார்த்தபடி
அதிகாரம் செய்யும் கணவனே
சற்று நேரம் நீ மிதிக்கும் உன்
மனைவியாய் மாறு,
புரியும் வேதனை! ○ நளாயினி தாமரைச்செல்வன்

ஊடறு கவிதைகள்

**1.** உறவுகளைக் காணோம்.
மலர்க் கொத்துக்கள்
முதியோர் இல்லம்.

**2.** ஈழ வான்பரப்பில்
இயந்திரப் பறவைகள்
தமிழின அறுவடை.

**3.** சிறகரிந்து
வீட்டில் கற்கும் கிளி
பெண்.

**4.** பசி
ஏப்பம் விட்டது
அம்மா தாயே.

**5.** உழாது
விதைத்த நெல்மணி
சிசுக்கொலை.

**6.** முத்தம்
கலைத்த முகில்
கார் கூந்தல்.

**7.** அம்மா திரித்த
கயிறு
தொப்புள் கொடி.

**8.** சூரியனின்
கை பிடித்துப் போகிறாள்
சூரிய காந்திப்பூ.

**9.** மனிதம்
மண்டியிட மறுப்பு
போர்.

**10.** சிவந்த விழி
கன்னத் தளும்பு
அராஜகக் கணவன்.

## வயற்காட்டுக் காவற்காரி

அவளது தலைமீது
குருவிகள் தங்கிச் செல்லலாம்
அவளது தோள்மீதமர்ந்து கிளிகள் சத்தமிடலாம்
எனினும்
பட்சிகளைப் பயங்காட்டவே
ஓங்கிய தடியொன்று அவளது
கரங்களில் தரப்பட்டிருக்கலாம்.

யாருடைய விளை நிலமோ அது!
விதிமுறைகள் வேறில்லை -அவள்
காவல் புரிந்தாக வேண்டும்.

அவளிடம் இதயமில்லை
அவளது விழிகளில் ஜீவனில்லை
ஓசைகள்
அவளது செவிகளில் விழுவதேயில்லை
ஆனாலும்
ஆடைகளும் அலங்காரங்களும்
மனிதப் படைப்பென்று காட்டவே அவளுக்குச்
சூடப்பட்டுள்ளன.

ஊடறு கவிதைகள்

கொட்டும் மழையிலும் -அவள்
சிரித்துக் கொண்டிருப்பாள்
எரிக்கும் வெயிலிலும் இன்முகத்துடனே இருப்பாள்.

அவளது வேதனைகளை வெளிக் காட்டும் படியாக
அவளின் முகக்கோலம் அமைந்திருந்தால்,
காணுகின்ற கண்களிலெல்லாம் கண்ணீர் வழியும்.

அவளுக்கு உருவினைத் தந்த
மனிதர்களின் நிம்மதிக்காக
புன்னகையெனும் போலிக் கோலம்
அவளது முகத்தில் தீட்டப் பட்டுள்ளது.

யாருமற்ற அமைதியான இரவுகளில்
நிலவின் மெல்லிய கிரணங்கள்
அவளை விசாரிக்க வந்து போகும்.
அவள் அண்ணார்ந்து பார்த்ததேயில்லை.
நட்சத்திரங்கள்
திசைகளையும் வாழ்வின் திருப்பங்களையும்
ஓயாது சொல்லும்
அவள் காது கொடுத்துக் கேட்டதேயில்லை.
விடியலின் பூபாளம் அவளைச் சுற்றியே எழும்
அவள் வரவேற்றதேயில்லை.

இவர்களின் விதிமுறைகள்
அவளை அசையவிட மாட்டாது.

அவளைத் தாங்கி நின்ற பூமியே!
அவளைப் பரிதாபமாய்ப் பார்த்திருந்த வானமே!
அவளது மௌனமும் ஒரு நாள் வெடிக்குமா,
குமுறுகின்ற எரிமலையாக,
அதிரவைக்கும் இடிமுழக்கமாக! ○பஹீமா ஜகான்

## எனது சூரியனும்
## உனது சந்திரனும்

பொன்னந்திக் கிரணங்கள் படியத் தொடங்கிய மாலையில்
குளிர்ந்த மலையை விட்டு கீழிறங்கி
தும்பிகள் பறந்து திரிவதும்
தங்க நிறக் கதிர்களாடுவதுமான வயல் நிலங்களையும்
நீரோடைகளையும் தென்னந்தோப்புகளையும் ஊடறுத்து
மனிதர்கள் வடிந்து போன சந்தைக் கட்டடங்களையும்
மஞ்சள் வண்ணப் பூச்சொரியும் பெரு விருட்சத்தையும்
தாண்டி நீ சந்திக்கு வந்தாய்

ஊடறு கவிதைகள்

பணியை முடித்து
நகரத்தின் நச்சுக் கரும்புகையில் தோய்ந்து
வாகன இரைச்சல் செவியோரம் இரைந்திட வந்திறங்கி
வீடு நோக்கி நடந்த வேளை
திடீரென எதிரே வந்து வேகம் குறைத்தாய்

உன் வானிலொரு சூரியனையும்
என் வானிலொரு சந்திரனையும் கண்டோம்
கதைப்பதற்கு இருந்த எல்லாச் சொற்களும்
கண்களிலேயே தேங்கிடக் கண்டோம்
அன்றும்
தலை திருப்பி நான் பார்க்கும் கணம்வரை காத்திருந்து
புன்னகையை உதடுகளில் மறைத்து
ஏதோ ஒரு இராகத்தை மீட்டிய படியே
வேகம் கூட்டிச் சென்றாய்

அன்பு பொங்கிப் பிரவகித்த அபூர்வ நாட்களில்
நிழல் போலப்
பிரிவைச் சொல்லிப் பின் வந்தது காலம்

நான் வரச் சாத்தியமற்ற இடங்களில் நீயும்
நீ வரத் தேவையற்ற இடங்களில் நானும்

வாழ்வின் விதிமுறைகள்
எனதுலகையும் உனதுலகையும் வேறு பிரித்த வேளையில்
விடைபெற்றோம்
ஒன்றித்துப் பறந்த வானத்தையிழந்தோம்
இறுதியாக அன்று தான் அழகாகச் சிரித்தோம்

எனது சூரியனும் தனித்துப் போயிற்று
உனது சந்திரனும் தனித்தே போயிற்று
○பஹீமா ஜகான்

## அழிவின் பின்னர்...

வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தின்
அடிக்கட்டை மீது
அமர்ந்துள்ளது பறவை.

இன்று அதனிடம்
பறத்தலும் இல்லை, ஒரு
பாடலும் இல்லை.

அதன் விழிகளின் எதிரே
வெயில் காயும்
ஒரு பெரு வெளி விரிந்துள்ளது.

அந்த மனிதர்களைச் சபிக்கிறதோ
தனது கூட்டை எண்ணித் தவிக்கிறதோ!

பறத்தலையும் மறந்து
பாடலையும் இழந்து
வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தின்
அடிக்கட்டை மீது
அமர்ந்துள்ளது பறவை! ○பஹீமா ஜகான்

# தடுமாறும் தனிப் பாதம்

பரப்பிவைக்கப் பட்டிருக்கும் பொருட்களெதிலும்
பார்வையைச் செலுத்தாமல்
பாதிமூடப்பட்டுப் பூட்டுடன் தொங்கும்
விசாலமான கதவினை
பார்த்துக் கொண்டிருக்கிறாள்
கடைக்குப் போன சிறுமி.

தெருவோரம்
கால் நீட்டியமர்ந்த வண்ணம்
சேகரித்து வந்த
உபயோகமற்ற பொருட்கள் நிரம்பி வழியும்
பொதிகளையே வெறித்தபடி கிடக்கிறாள்
சிந்தனை பிசகிய மூதாட்டி.

ஓடிச் சென்று ஏறிக்கொண்ட
பையன்களை உள்வாங்கி
விரைகிறது பேருந்து.
ஊன்றுகோலுடன் நெடுநேரம் காத்திருந்த
மாற்றுவலுவுள்ள மனிதனை
அந்தத் தரிப்பிடத்தில் விட்டுவிட்டு!
○ பஹீமா ஜகான்

ஊடறு கவிதைகள்

(தலைப்பிலிக் கவிதை)

இப்ப முளைச்சதுகள் றக்க கட்டி
பறக்குதுகள்
பொன்னாச்சியின் முணுமுணுப்பு
நேரம் இல்ல எண்டாத்தான்
காலம் போல.

இது எனது அவதானிப்பு
தூங்கி முளித்த கண்ணுடன்
படுக்கையில் புரள்வேன்
பகல் கனவாய்.

பாதையெங்கும்
பட்டு விரிக்க வேண்டும்
எனும் ஆதங்கம்
என்னுள் பொங்கும்.
எரிச்சலுடன் எழுவேன்
எத்தனையோ வேலைகள்
எனக்காகக் காத்திருக்க!

ஊடறு கவிதைகள்

எனக்கான வேலைகளை
எப்போது செய்வது?

எவர் எவரோ வேலைகளுக்கு
நான்தான் இலவச
இணைப்பு
கண்ணாடியில் என் பிம்பம்
பரிதாபமாய்ப் பார்க்கும்
எடுத்துச் சொல்ல வேண்டும்
இன்றைக்காவது.

அடுப்படியில் திட்டம்
பலமாய் எழுதப்படும்
இன்றும்.
அலுவலக வேலைக்கும்
ரிசேச் என வந்ததுக்கும்
நேரம் பறக்க
விட்டால் போதும் என்றபடி
பேனையையும் விட்டு
வீட்டிற்கு வந்து
எல்லாம் முடித்து
அப்பாடா
எழுதலாம் என்றால்...

நினைப்பே களைப்பாகி
இல்லாத பேனை தேட
பேனை இல்லை
இதுவே களைப்புக்கு
மருந்தாக
அடுப்படியில் திட்டம்
இன்றாவது கட்டாயம் என அடுத்தநாளும்
எழுதப்படும் அகப்பையுடன் ○விஜயலக்சுமி

ஊடறு கவிதைகள்

# அதி அந்தரங்க உயிரும் என் உயிர் வெளியும்

கருத்தொருமிப்பும்
எண்ணங்களும் பிரசவிக்கும்
எண்ணற்ற உறவுகள்.

நாடு, நகரங்கள் எல்லாம் நண்பிகள்,
அவர்களுக்காக
என் நேரம்
என் உழைப்பு
என் இடம்
என்றுமே உண்டு.

ஆனால் உனக்காக?
ஏன் என்னால் முடியவில்லை?
ஏன் இந்தக் கொடுமை?

சோம்பேறிக் காற்றுக்கும்
சிலுசிலுக்கும் குளிருக்கும் கூட
ஏனிந்தப் பொறாமை?

உன்னோடு மட்டும்
பகிர்ந்து கொள்ளவும்
உறவாடி மகிழ்ந்திருக்கவும்
என் உணர்வுகளையும்
என் உயிர்வெளிகளையும்
ஒதுக்கி வைத்திருக்கிறேன்.
ஏனிந்தக் கட்டுப்பாடுகள்?
நீ ஆணாகவும்
என் ஆதி அந்தரங்க
உயிராகவும் இருப்பதாலா?

ஊடறு கவிதைகள்

தேடவும் பாடவும்
கூடவும் சூடவும்
நீ எனக்கு வேண்டும்

என்றோ ஒரு நாள்
எங்கோ ஓர் இடத்தில்
காலத்தின் கைதிகளான நமது விடுதலை
கனவில் இருந்து
நனவில் நிகழும். ○சுல்பிகா

## கற்பும் கதவும்

கதவுக்கும் கற்புக்கும் உறவுண்டு,
கருகிப் போன புல்வெளிக்கும்
இறவாதிருக்கும் உன் தாய்க்கும்
இருப்பது போல.

கேள்வி கேட்பதற்கு
உனக்குள்ள உந்தலுக்கும்
பதில் கூறமுடியாதிருக்கும்
உன் மனைவியின் மௌனத்திற்கும்
அதே உறவுண்டு

பின்னிப் பிணைந்துள்ள
இந்த உறவுகளின் பின்னால்
அடங்குதலும் அடக்குதலும்
அமைதியாக உண்டு
அவ்வாறே உயிர்களும்
அதன் உணர்வுகளும் உண்டு. ○சுல்பிகா

# உயில்களல்ல உயிர்கள்

எனக்கும் உனக்கும்
உள்ள உறவு
கடதாசியில் எழுதப்பட்டுள்ளதாக
நீ நினைக்கலாம்.
உண்மை எதுவாக இருப்பினும்
கடதாசிகள்
பலமானவை உனக்கு,
எனது ஓராயிரம்
உணர்வுகளைவிட.

கந்தல்களைக் கட்டிக்கொண்டே
அருவருப்பில் அல்லாடும்
என் உணர்வுகள்.
சாக்கடைக்குள் புரளும்
பூச்சிகள் தாபம் உனக்கும் புரியாதவை.

உனக்கு உள்ளது போல
உரிமைகள் எனக்கும் உண்டு
ஏனெனில் நான்
மானிடப் பெண்ணாகப் பிறந்திருக்கிறேன்
எனக்கும் உனக்குமிடையிலுள்ளது ஓர்
ஒப்பந்தம் மட்டுமே, என்
உயிருக்கான உயிலல்ல. ○சுல்பிகா

# உதிரும் நதி

தாய்ச் செடி வாசம் துறந்து
கடத்தி வரப் பெற்று
கரையோரம் வேர் விட்ட விருட்சம் நான்.

நதி நீர் நனைத்துப் போட
பச்சைச் சிறகு விரிக்கின்றன
என் அரும்புகள்

நீர் நிறைகின்ற நேரமெல்லாம்
கூடு கட்டி குஞ்சு பொரித்து
காணாது போகும் பறவைக் கூட்டம்
வந்தமர்கின்ற வசந்தமாக
எப்போதும் எனக்குள் அதிர்வுகள்.
நடந்து செல்லும் நதி
கரை கடக்கையிலெல்லாம்
நெஞ்சதிர்வுகளை இன்னும்
ஆழப் புதைக்கின்றேன்.

புதையுண்ட இடமிருந்து விரியும்
புதிய நூற்றாண்டு நோக்கி என் வேர்கள்.

கரைமீறுவதற்கெல்லாம்
கொதிக்கும் எனைப் பார்த்து
பட்டுப் போனதாய் நதி
கேலிச் சிரிப்பை எதிரொலிக்க
நிராகரித்து இடம் பெயர்ந்திருந்தது மரம்
வேர்கள் வழியாக.

மரம் தொலைத்த நதி
வியர்வையில் தத்தளிக்க
யார் விட்டும் துடைக்க முடியாது
மூழ்கி மூச்சுத் திணறி
செத்து மணலாய் உதிரும். ○திலகபாமா

திலகபாமா இந்தியா

## ஒரு கவிதாமரத்தின் இறப்பு

தலையணைகளைச் சரிப்படுத்துகிற
வழமையான ஒரு காலைப் பகலில்
கிளைத்திருந்த துளிர்கள்
யாவையும் தொலைத்திருக்கும்
கவிதாமரம் மனசிடறிற்று.
மஞ்சளாகி
மூத்துதிரா அதன் திடீர் மரணம்
உன்னால்
என் மோதிரவிரலில் ஏற்றப்பட்டிருந்த
பொன்விலங்கினால் நிகழ்ந்தது.

ஒரு அழகிய நதி
குதியல் தொலைத்து
குளமாகிய
அதே கணத்தில் இருந்து தான்
என் கழுத்தில் ஆடுகிறது
உன்னால் இடப்பட்ட மூன்று முடிச்சு.

யாருமருகற்ற பொழுதுகளில்
நினைவுகள் குலுங்கிச்
சரிகின்றன,
நீளவானில் வெடித்துதிருகிற
நட்சத்திரவால்களின் துரதிஷ்டத்தோடு.

ஊடறு கவிதைகள்

கனவுகளின் மீதேறியிருந்த
வானவில் துகில்
வர்ணம் தொலைத்துள்ளதில்
கனவுகளும்
மீத வெற்று நனவுகளோடு
சேர்ந்துருள்கின்றன,
இருளில் பிணைதலுற்ற
இரு பாம்புகளாய்.

எனினும்
முன்பொருநாளில்
மனசு தேங்கிய
பச்சிலைகளின் வாசத்தில் மயங்கி
விழிமூடிக் கிடக்கிறேன்,
வாயில் மணி
உன் விரல் தொட்டு
அழும் வரைக்கும்! ○சாரங்கா தயாநந்தன்

## எல்லாம் செய்கின்றாய்

எல்லாம் செய்கின்றாய்
அப்போதெல்லாம்
கை காலில் அடிபட்டால்
உன் கன்னமுத்தம் மருந்தாகும்
அனைத்தும் சரியாகும்.
துயரம் உன்முகம் பார்த்தால்
தோளில் சாய்ந்து அமைதியாவாய்
மெல்லச் சரிந்து
மடியில் படுப்பாய்
தன்னிச்சையாய்

ஊடறு கவிதைகள்

உன்முடி கோதுகின்ற
கைவிரல்கள் களைக்கும் என்று
அவற்றை அழுந்தப் பற்றி
உன் உதடுகளில்
உறங்க வைப்பாய்.
பின்னர் எழுவாய் முகந்துடைத்து
புதியதோர் விடிகாலைப் பூவாய்.

வசந்த அழகுகளில்
ஏக்கம் அப்பும்
ஒற்றைக் குருவி கண்டால்
அதன் இணையை
உன் விழிகள் அவசரமாய்த் தேடும்
தனிக்குருவிக்காய்
ததும்பும் பெண்மனம் தவிர்க்க
மனதில் ரீங்காரிக்கின்ற
பாடலிசை முணுமுணுத்தால்
அதை மென் பாடலாய்
நீ இசைப்பாய்.

இப்போதும் கூட
எல்லாம் செய்கிறாய் மகனே
ஒதுக்க அறையில் தனித்த வெண்புறா
என்னுடன் அல்ல,
அழகிய உன்னிளம் மனைவியோடு.
○ சாரங்கா தயாநந்தன்

# கொள்கைக் குடை பிடித்து நடப்பாள்

முற்றத்து கல்லொன்றில்
முத்தம்மா அமர்ந்திருக்க
எட்டத்தில் செல்லுகிறாள் பேத்தி
அவள் கையிலுள்ள புத்தகங்கள் நேர்த்தி

கிட்டத்தில் நடந்து சென்று
கீழ் வளைவு வங்கருகே
சட்டென்று வந்து நிற்கும் பஸ்ஸில்
சடுதியாக ஏறுகிறாள் பார்த்து

வெள்ளை நிறச் சட்டையுடன்
இரட்டைப் பின்னல் முதுகைத் தொட
கள்ளமில்லா பார்வையுடன் வருவாள்
காணும்போது கண்ணியத்தைத் தருவாள்

புகை கக்கும் விளக்கொளியில்
பூமியில் அமர்ந்தபடி
தொகையான பாடங்களைப் படிப்பாள்
தூரவுள்ள நம்பிக்கையை நினைப்பாள்

நீர் கொணர்ந்து புல் அறுத்து
நாலு புறம் மனை கூட்டி
பார் பிடித்து தோட்ட வேலை செய்வாள்
பத்திரிகை பலவற்றைப் படிப்பாள்

ஊடறு கவிதைகள்

வெற்றிலையும் போடாமல்
ஊர்வம்பும் பேசாமல்
முற்றிய நோக்கமதை எண்ணி
முழுமூச்சாய் கல்வியதை கற்பாள்

வீட்டுக் கணக்கு செய்து
விஞ்ஞான விடையெழுதி
நாட்டுச் சரித்திரமும் அறிவாள்
நல்ல கிரிகைகளைப் புரிவாள்

சுட்ட நீர் அருந்தி உணவை மூடி வைத்து
சுகாதாரம் அறிந்ததனை செய்வாள்
கெட்ட பழக்கமதை கீழாக தள்ளிவைத்து
கொள்கைக் குடைபிடித்து நடப்பாள்

எட்டத் தெரிகின்ற ஏற்றமிகு நம்பிக்கை
ஏந்திடவே மொழிகள் பல உரைப்பாள்
சுட்ட பொன்னாக விளங்கி மலைநாட்டில்
சூழ்ந்த கருமைதனைத் துடைப்பாள்

முத்தம்மா காலத்து மூத்த பழமைகள்
முடிக்க புதுமகள் பிறந்தாள்
சுத்தமாய் பொன்னொளி எங்கும் பரப்பிட
சுந்தரத் தமிழ் மகள் நடந்தாள்

முற்றத்துக் கல்லொன்றில்
முத்தம்மா அமர்ந்திருக்க
எட்டத்தில் செல்லுகிறாள் பேத்தி
அவள் கையிலுள்ள புத்தகங்கள் நேர்த்தி!
○எஸ். இஸ்மாலிகா

# ஆத்மாவின் ஒரு ஓலம்

குண்டுகள் விழுந்த மண்ணில்
நான் பிறந்தேன்
குண்டுகள் தகர்ந்த மண்ணில் நான் வளர்ந்தேன்
குண்டுகள் வெடித்த மண்ணில்
நான் இறந்தேன்.
குண்டுகள் புதைத்த மண்ணில்
நான் புதைந்தேன்.

விலங்குகள் உடையும் என
நினைத்திருந்தேன்.
காயங்கள் ஆறும் என பார்த்திருந்தேன்
இருள் வானம் வெளிக்கும் என காத்திருந்தேன்
சூரியன் உதிக்கும் என்று விழித்திருந்தேன்

குண்டுகள் விழுந்த மண்ணில்
நான் பிறந்தேன்
குண்டுகள் தகர்ந்த மண்ணில் நான் வளர்ந்தேன்
குண்டுகள் வெடித்த மண்ணில்
நான் இறந்தேன்.
குண்டுகள் புதைத்த மண்ணில்
நான் புதைந்தேன்.

காலங்கள் அலைகளாக கலையக் கண்டேன்
என் ஆத்மாவும் அழுததை நான் உணர்ந்தேன்
விடியும் நாளை என்று ஒளி ஏற்றினேன்

விழித்த என்னை மீண்டும் இம்மண்ணில் புதைத்திடுங்கள்
குண்டுகள் விழுந்த மண்ணில் நான் பிறந்ததனால்
விழித்த என்னை மீண்டும் இம்மண்ணில்
புதைத்திடுங்கள்! ○பாமதி பிரதீப்

பாமதி அவுஸ்திரேலியா

ஊடறு கவிதைகள்

அவுஸ்ரேலிய
ஆதிவாசிகளின்
போராட்டம்
பற்றியது...

# தொலைக்கப்பட்ட தரவுகள்

அழகிய நிர்வாணமான நிலப்பரப்பில்
நடனமாடி நளினமாகப் பதிந்தது மனிதர்களின் பாத அடிகள்

அந்த கருப்பு தேகங்களின் வியர்வையில் ஒளி பட்டுத்
தெறித்து
கருநீலக்கடல் கூட மினுமினுத்தது
கரையை அடித்து ஆர்ப்பரித்த அலைளுக்குள் இருந்து
உடைந்து போன மீன் வலைகளுடன் கரை நோக்கித்
தள்ளப்படுகிறது கேள்விகளும்தான்

பறிக்கப்பட்டது பற்றி
மறுபடியும் மறுபடியும்
எழுந்து நின்று கோரப்படுகிறது
உரிமை

அந்நியர்களின் நுழைவு
ஏமாற்றப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலம்
அதை நோக்கிய போராட்டத்தை
நசுக்கப்பட்ட ஒரு சமூகம்  மாற்றியமைக்கப் படாத
வேதனை...

நேற்றிரவு என்னுடைய கனவில்
நான் நடந்து கொண்டிருக்கிறேன்
ஒரு வரட்சியான
பற்றைக்காட்டு நிலப்பரப்பில்

ஊடறு கவிதைகள்

பூமிக்குள் சத்தம்
அழகாக அச்சடிக்கப்பட்ட தேசிய கீதம் அல்ல
ஏமாற்றப்பட்டுக் கொல்லப்பட்ட
அந்த உன்னதமானவர்களின் மரணவலியும்
புதைக்கப்பட்ட போராட்டமும் தான்

திடீரென கனவை விட்டு விழித்தேன்
தேடினேன் அழிக்கப்பட்ட தரவுகளையும்
ஒழிக்கப்பட்ட அந்த சமூகத்தையும்

முகத்தில் அறைந்து
பேய் போல் காற்று சிரித்தது
மறுபடியும் மனித நேயத்தின்
மரணவாடை

அவர்களின் அடையாளத்தை
காவி நின்றது எல்லைகளுக்கப்பால்
அழுதுகொண்டிருந்த மலைப்பாறைகள் மட்டுந்தான்
அதில்
வரிபோட்ட மீன் குஞ்சுகளும்
வயிற்றில் குட்டிகளை சுமந்து கொண்டு
நிற்கும் கங்காருவும்
இலைகளின் ஆயுள் ரேகையை
இயற்கையை நேசித்து பாதுகாத்த
அழகான மனிதர்களையா சீ!. ○பாமதி பிரதீப்

(presented
the English version
in the Blacktown Art Center
in Australia)

இனந்தெரியாதோரால்
பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு
கொலை செய்யப்பட்டு,
மட்டக்களப்பு மத்தியகல்லூரி மண்டபத்தில்
03.08.2005 அன்று
பிணமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்
அடையாளங் காணப்படாது
புதைக்கப்பட்டார்.
இவரைப் போன்று
கொல்லப்பட்ட பிள்ளைகளை
அடையாளங்காட்ட முடியாச் சூழலில் வாழும்
அன்னையருக்கு
இக் கவிதை சமர்ப்பணம்.

## பெயரில்லாமல் போன மகளுக்கும் வெளிச்சொல்ல முடியாத் தாய்க்கும்

கண்ணுள் வடியா
நீர் தேக்கி, நெஞ்சுள்
தணியாத் தீ வளர்த்து
வாய் மூடி
வானத்தில் உன் துயர்
படிப்பேன் என் மகளே!

நட்சத்திரங்களில் மின்னும்
உன் பார்வை
நிலவில் மறைந்திருக்கும்
உன் சோகம்.

ஊடறு கவிதைகள்

முகில் விலக்கிச் சுட்டெரிக்கும்
சூரியப் பார்வையில்
உன் உடல் சிதைத்த,
மனம் சிதைத்த,
உயிர் புதைத்த,
ஆண்களின் வக்கிரங்கள் எரிப்பதாய்!

சுட்டெரிக்கும்
தாய் நட்சத்திரமாய் உன் பார்வை
தீயது நீக்கி இவ்வுலகில்
நன்மையே செய்வதாய்!
○கமலா வாசுகி

(தலைப்பிலிக் கவிதை)

சூழவுள்ள அனைத்திலும்
அனைவரிலும்
தனித்தது என் தீவு - அதில்
சாளரங்களும் அற்றுப்போக,
மனதின் திசை எட்டும்
என்னைச் செலுத்தும் சாரதியாய்
என் கண்கள்
பயமற்றுத் திரியும்.

செல்லத் திசையறியா மனதைப்
பிடித்திழுத்து ஒளியூட்டும் - கண்கள்
பலமற்றும் போக
நான் திசையற்றுப் போவேனோ?
○கமலா வாசுகி

ஊடறு கவிதைகள்

(தலைப்பிலிக் கவிதை)

தாய்க்கும் இயற்கைக்குமான
தம் துரோகம் மறந்து,
புதிய வரைவிலக்கணங்கள்
கண்களில் வடிய,
கைகள் அவை வழி கொல்லும்.

யார்க்கும் யாரிலும் அன்பற்றுப் போக...

அரசுரிமை வீட்டுள்ளும் பேசத் தொடங்காப்
பெண் குரலின் சிறைவைப்பில்
சுவைகண்ட வேலிகள் சுற்றிச் சுழன்று
அனைத்தையும் சிறைப்பிடிக்க,

சிந்தனை விரிக்க முடியாச் சந்தேகச் சிறையுள்
சத்தமாய் சிரிக்கவும் சந்தேகமுறும் மனது
இவையற்ற ஊரொன்று இவ்வுலகிலுள்ளதோ என
உயிர் கிடந்து அவாவி
அன்றன்று வாழ்வதில் மட்டும் மகிழும்.

கொல்வதற்கான காரணம்
துரோகம் - புது வரைவிலக்கணம்

வாழ்வதற்காய் அன்றிப்
போருள் சாவதற்காய்
ஒரு பிள்ளை பெறத் துணியாப்
பெண்ணுரிமை காண்போம் வாரீர்! ○கமலா வாசுகி

# கருக்கலைப்பு

இயந்திரத் துப்பாக்கியுள் செலுத்தி
அதை அழுத்தி ஒரு குண்டை
உமிழச் செயும் விரலின் உணர்வை விட
மலினப்பட்டுப் போன பிரசவ வலி

இனமும் மதமும் அறியாச் செருக்குடன்
கைகளை வீசி உலகை அளக்கும் பிஞ்சின்
பின்னும் முன்னும் அடையாளக் குறிகளிட்டு
அழிப்பதற்கான நாள் வைக்கும் குரோதம்

ஆயின்
கொடுப்பவனும் நானே கொல்பவனும் நானே
கருவில் நீ கொல்லற்க எனத் தடைவிதிக்கும்.

தாயின் கரு உதித்த
ஒரு பிள்ளையைத் தன்னும் கொல்லும் அதிகாரத்தை,
இனத்தின் பெயராலும்,
மதத்தின் பெயராலும்
உலகத் தலையென்ற பெயராலும்
யாரும் எடுப்பரெனில்
கருவில் கரைக என் பிள்ளாய்!

போர்களை நிறுத்தியபின்
கருக்களைப் பற்றிப் பேசுவோமாக! ○கமலா வாசுகி

ஊடறு கவிதைகள்

## பிரசவம்

அவள்
அந்தத் தை மாதக் காலை
குளிர் காற்றில்
சிதைந்த முகில் கூட்டங்கள் போல
சீர் குலைந்து சிந்திக்கொண்டிருந்தாள்.

அழகியல் படிமங்களோடு
அவளில் அவதரிக்கும்
கவிதையின் கருக்கட்டல்
அனுபவச் செறிவுகளோடு
உணர்வுகளின் ததும்பல்களில்
அர்த்தமுள்ள வடிவங்களாகி
மொழியோடு லாவகம் கைகூடி
அவளில்
ஆகர்ஷித்து ஆனந்தமாகிறது.
கற்களைச் செதுக்கச் செதுக்க
மறைந்திருந்து மகிடி காட்டும்
அழகிய சிற்பம் போல
அவளுள் உருவெடுக்கிறது.
மொழி மயங்கி
உணர்வுகள் அர்த்தமாகின்றன.

பச்சிளங் குழந்தை தவறிவிழ
பதறி எடுக்கும் தாயைப்போல
பாசத்தின் பரவசத்தில்
அவள் பிரசவித்த குழந்தையை
பரிந்து முத்தமிட்டாள்.

எத்தனையோ கொலைகள்
ஏராளமான உயிர்ப்பலிகள்
எதுவும் சித்திரவதை
அறுவைச் சிகிச்சைதான்
சுகப்பிரவசமல்ல

ஊடறு கவிதைகள்

பரந்த தேடல்கள்
நம்பிக்கை
என் தேசத்தின் அந்த அரசியலும்
ஒரு பிரசவம்தான்.

அடிக்கடி எழும்
முனகலையும்
முக்கலையும் தவிர
நிஷப்தமாயிருந்தது அறை
இறப்பின் எல்லைவரை
போய் வரும் வேதனைகள்
வேதனையால்
கோணிப்போன முகம்
அங்கலாய்த்த அலறல்கள்
ஒவ்வொரு ஐந்து நிமிடத்துக்கும் வரும்
அடிக்கடி வீரிட்ட அழுகை
அயர்ச்சியுடன்...

சுற்றிலும் சாதனங்கள்
இயந்திரக் கருவிகள்
சுவர் மணிக்கூடு
கத்திகள் கத்தரிக்கோல்
கதிர்களாக மிளிர்ந்தன.
அழுகை அடங்கியது
அலறலுடன்
அந்தப் பிரசவம்!
புதிய ஜீவன்
கண்ணீர் நிறைந்த கண்களுடன்
அவள் சிரித்தாள்.
தாய்மை
எவ்வளவு உன்னதமானது!
தாண்டவம் ஆடியது
அவள் உள்ளம்.
ஒரு ஆணால்
முடியாத காரியம்! ○நவஜோதி

ஊடறு கவிதைகள்

# பறவைப் பெண்

எங்கும்
சனக் காடுகள்
குயில்களின் கூச்சல்
பிஞ்சுக் குழந்தைகள்
அழுதபடி.
உணர்வுகள்
வீரியம் குறைந்து
உயரப் பறக்க முடியாமல்
சிறகுகள் அடித்தபடி.
சிதைந்த
பறவைப் பெண்ணின்
கற்பனை
உலாப் போகிறது.

முதலில்
முத்தமிட்ட
கருவின் மணம்
பாலூட்டும் மார்புகள்
சுவைத்துப் பெருகுகிறது
மனித இனம்.

முதல் மழையின்
மண் வாசனை
மனதின் சுவர்களை
மெத்தென்று இதழாய்
வருடிப் போகிறது.

கற்பனைச் சித்திரங்கள்
கீறல்களாகி
அரூப ஓவியங்கள்
அவை
கடல்
மரங்கள்
மலர்கள்
செடிகள்
அருவிகள்
பறவைகள்
பட்டாம் பூச்சிகள்
இனங்களின்
பெருக்கம்.
பெண் உருவங்கள்
வீரிடும் குழந்தைகள்

பாதி உயிர் சுமந்த
பயணத்தில்
கருவில் ஓர் கனத்தை
எதிர்பார்த்தபடி அந்த
பறவைப் பெண்.

நாளை நாளை
காத்துக் கிடந்தபடி.
மாத்திரைகள்
மரமாகிப்போய்
காளான்களாகின்ற
குமிழ்கள்.

இரத்த நாளங்கள்
சிதைந்து
சுருதியிழந்த ராகங்கள்

கொதிக்கும் பை இழந்து
கனம் இல்லாத வயிறு வழி
பறவைப் பெண்ணின்
உடல் தோற்றங்கள்
உள்ளம் சிதைந்து
புகைகிறது குழந்தை.

புகார் நிறைந்த கட்டிடங்கள்
மரங்களின் முனகல்கள்
வானம் ஒளியிழந்து
கவிழ்ந்து கரைந்து
இருள் பரந்தபடி. ○நவஜோதி

# மௌனத்தின் ரேகை

தடிமனான இரும்புத் தகடுகளைப்போலச்
சுருள்சுருளாய்
அதிக கொதிநிலையில்
இரத்தத் துளிகளைப்போல்
அடர்த்தியாய்ச் சொட்டுகின்றன
பச்சை உடல் புண்ணாக

சப்தங்களோ சிதறியோடி
அறைகளைத் திருடிக்கொள்கின்றன
காகங்கள் அலைவதைப்போல்
கல்லடிக்குச் சிதறி
நகரத்தைக் கலைக்கின்றன

ஒலிகளின் கையெழுத்துக்களை மட்டும்
பதிவு செய்துகொண்டேயிருக்கிறோம்
மௌனத்தின் ரேகையை அன்று
நீண்ட உடலுடைய இலைகள்
தனித்து அசைவதைப்போல குரலற்றுக்
குரல்முளைகள் கத்தீட்டிகளாய்ச் சீற
வாதுமைமரப் பதாகையுடன் விழிக்கின்றன
நமது மௌனங்கள்

அப்படித்தான் உலர்ந்திறுகிய இரத்தக்கறைகள்
பாறைஓவியங்களாகிப் பேசுதலும் ○குட்டி ரேவதி

குட்டி ரேவதி
இந்தியா

ஊடறு கவிதைகள்

## உனக்கான கடிதங்கள்

ஊர்வன சுமந்துசெல்லும் மண்ணாங்கட்டிகளைப்போல
உருட்டிப் புரட்டிக்கொண்டும்
பல சமயங்களில் தரையோடு அழுத்தும் சுமைகளில்
இழுபட்டுக்கொண்டும்
என்னுள் கிளர்ந்தெழுந்து உன்னை
வந்துசேர்ந்துகொண்டேயிருக்கிற
நுரைக்கும் வாசகங்கள்
அதீதக் காமம் பொதிந்த சொற்களையும்
வெறுமையின் கதவுகளைச் சிதைக்கும் உத்திகளையும்
நீ தரமறுக்கும் உணர்வின் பேதலிப்புகளைக் கோரியும்

பிரித்துப்பார்க்கத் துணியாமல் நீ மூலைகளில்
விசிறும்போதுகூட
அவை உயிர்கொண்டு முனகுவதில்லை
கல்லறைக்குள் போய் இறங்கியதைப்போல்
சொற்கள் கண்திறந்தவண்ணம்
வண்ணத்துப்பூச்சிகைளத் தேனருந்த அழைத்தவண்ணம்
பிறந்துகொண்டேயிருக்கின்றன

பாலுணர்ச்சி விழித்துக்கொண்ட சொற்களை
அடைக்காமல் அனுப்பும் கடிதங்களையும்
முகர்ந்துபார்க்கிறாய் நீ
மல்லிகையின் கமழும் நாற்றமும்
இதயப்பாலையில் நிர்வாணமுறுத்துகிறது என்னை

உணர்ச்சியின் பிளிறல் கிளப்பும் ஒளிக்கம்பத்தில்
சுழலும் கதிரெழு துகள்களினும்
உன் உருவத்தை எனக்குத் தரமறுத்தாய்
○குட்டி ரேவதி

ஊடறு கவிதைகள்

## பிரசவம்

நீர்ப்பாத்தியில் நிழலேதும் வேண்டாது
தாவரஇச்சையின் மிடுக்குடன் எழும்
திரண்ட கவர்ச்சியின் வாழை
குலைதள்ளும் நாளில்
உமது அரிவாள் வெட்டி சாய்த்தது
தோலுரித்தது
உடல் கிழித்தது
காலைச் சுற்றிலும்
கணுக்கால் உயரத்தில்
மறுமுறை முளைத்தெழும்
என் கம்பீரத்தோகைகள்
○குட்டி ரேவதி

## எனது வீடு

நினைவின் விதைக்கன்றுகளைப்
பத்திரப்படுத்துவதற்கானவையே வீடுகள்
சேகரமானவற்றைத் தூசுதட்டி
அடுக்கிவைக்கும் பொறுப்பை அவரவர் மேற்கொள்ள
யார்பார்வைக்கும் அகப்படாது
கழிவறைப்பேழைகளில் சடாரென்று நீர்மூச்சில்
அடித்துச் செல்லப்படும்
வாடகைவீடுகள் அபகரித்த நினைவுகளை
மீட்கமுடிவதில்லை

குட்டிரேவதி இந்தியா

ஊடறு கவிதைகள்

ஒவ்வொரு வீடாய் மாறிப்போகும்
எனது அடையாளமுத்திரை மறைந்த பேதலிப்பு
எனது சுழற்றிவிட்ட திசைகள்
மீண்டும் அதனதனிடத்திலே பயந்தமர்ந்தனவா என்ன?
காமச்சீற்றம் கொண்ட பருவங்களையும்
இருள்மூட்டிய பிரமைகளோடு உறவு கொண்ட
பொழுதுகளையும்
பதுக்கிக்கொண்ட வீடுகளின் இமைகளை விரித்து
உயிர்அடங்கா நினைவுகளுக்காய்த் துழாவுகிறேன்
பற்றியெரிந்து போயினபோலும்
அடுப்புமூட்டத்தின் கனவிரல்கள்
என்னை வெளியே தள்ளுகின்றன
ஒருவீடும் எனதன்றி பெருவீதிகளின் கரையொதுங்கிய
அவற்றின் மார்பில் ஒருபொழுதும் உறங்கமுடிவதில்லை
ஒற்றைத்தடம் ஓடும் வீடற்ற பெருங்காடாய்
நினைவின் மூட்டைகளை ஒவ்வொரு வீடாய்
சுமந்துசுமந்து பறிகொடுக்க
ஓர் அகதிப்பெண் அல்லவே நான்
என் வீடு வாயில்களறுத்து
கூரைகள் கிழித்தது
உடல் ஒரு வீடாகி
நினைவுகளைப் பதுக்கிவைக்கிறது
என்றாலும்
நினைவுகளின் விதைகளை ஒளித்துவைக்க
உடல் சரியான உபகரணமல்ல என தெரிந்தேன்
ஒருபொழுதும் எனது வீட்டை
எழுப்பப்போவதில்லை என்பதையும்!
○குட்டி ரேவதி

## யுத்தமும் தர்மமும்

இன்னுமொரு பெண்
வெறிகொண்ட குண்டாக வீசியெறியப்பட்டாள்
ஐந்து மாதக் கருவும் போருக்குத் தேவையாம்
இனி எம் கர்ப்பங்கள் கண்காணிக்கப்படும்
உப்பிய வயிறுகளும் உரியப்படும்
தாய்மையை ஆயுதமாக்கிய வீரமாம்!

சில மாதங்களான குழந்தைகளை நோக்கியும்
சில வருடங்களான சிறுவர்களைக் குறிவைத்தும்
தாயின் கதறலை வென்ற
துப்பாக்கிகளின் ஓசைகள்
வீரர்கள் போர் செய்கின்றனர்
செய்து கொண்டேயிருக்கின்றனர்

எங்கள் பெண்களும் குழந்தைகளும்
அப்பாவி இளைஞரும்
துப்பாக்கிகள் மீதும்
அதிகாரங்கள் மீதும்
வெறிகொண்டவர்களால் மட்டுமே
சூழப்பட்டுள்ளனர்
கிழக்கிலும் மேற்கிலும்
வடக்கிலும் தெற்கிலும்
தீவின் திசையெங்கும்
வெறிகொண்டவர் அலைகின்றனர். ○தர்மினி

தர்மினி
பிரான்ஸ்

ஊடறு கவிதைகள்

## விலங்குகள்

படியேறி வந்தான்
‘அவரைச் சுட்டுவிட்டோம்‘ என்றான்
அவன் கைகளில் துப்பாக்கியும் அதிகாரமும்
நானும் குழந்தைகளும் வாய்திறக்கவில்லை
இன்னுமொரு துப்பாக்கிக்காரன்
உதடுகள் மடித்துச் சிரித்தான்
சொன்னது பொய் எனப்பட்டது
எம்மீதும் மிரட்டலுடன் விசாரணைகள்
வந்த வாகனம் படபடத்துப் போனது
ஆறு மாதங்கள் ஆனதும்
தோல் போர்த்த எலும்பாக வந்தார்.
பாஸ் இல்லாமல்
காட்டுப் பாதையால் கடந்த அடையாளமாக
விலங்கின் தழும்பு காலில் கறுத்துக் கிடந்தது. ○தர்மினி

## மிதக்குது மனது

சுழன்றடிக்கும் காற்றில்
மிதந்து செல்லும் சருகு போல
காதல் எனக்குள்ளே
மிதந்து கொண்டேயிருக்கிறது

திருமணம்
குழந்தைப் பேறு
வயோதிபம்
எதுவுமே மிதக்கும் என் காதலை அமிழ்த்தி விடவில்லை
அது தீர்ந்து போகாமல் மிதக்கின்ற வேளைகளிலெல்லாம்
திருமணமும் வரைமுறையும்
உடற்தளர்வும்
மனச்சுமையும்
என்னைக் கடந்து விடுகின்றன. ○தர்மினி

# ஆயுதம் வைத்திருப்பவன் நாசமாகப் போகட்டும்

இவ்வளவு குழந்தைகள் சாவு
இத்தனை குழந்தைகள் காயம்
செய்தி படித்து முடித்து
ஆற்றாமையில் ஐயோ சொல்லி
வேறென்ன செய்வோம் என்போம்
விட்டகதை தொடருவோம்...

அவை என் குழந்தைகளானால்...
கற்பனை செய்தால்
கண்கள் மூடா இரவு முழுவதும்

பேசத் தொடங்காத மழலைகள்
யுத்தம் புரியாத குழந்தைகள்
அரசியல் அறியாச் சிறுவர்கள்

ஆயுதங்கள் மிரட்டும் போதெல்லாம்
அஞ்சி நடுங்கி
எதை நினைத்து அலறுவர்?

குண்டுகள் வானிலிருந்து கொட்டும்
வெடித்துச் சிதறி
இரத்தம் வழிய குழந்தைகளும்
பெற்றோர், உற்றார் பிணங்களாய் விழ
வழிதெரியாது மிரண்டு திகைத்து இவர்கள்.

படுத்த பாயில் சுடப்படும் போது
கழுத்தில் சுருக்கிட்டுக் கொல்லப்படும் நேரம்
பயணிக்கும் வாகனம்
திடீரென அதிர்ந்து சிதற
ஏனென்று அறியாது குழந்தைகள்
அச்சமும் வேதனையும் அவர்களை...
இட்டு நிரப்ப வார்த்தையில்லை. ○தர்மினி

ஊடறு கவிதைகள்

# அவஸ்தை...
# ஆனால் வேண்டும்

கால்களைக் கட்டியபடி
கடற்கரையின்
ஈரமணலில்...

இரு கண்களும்
தொடுவானைப் பிரமிக்கும்

அலையும்
அதன் ஒலியும்
பொங்கு வெள்ளை நுரையும்
ஓடி ஓடி எதனையோ தேடும்

காதுகளை ஓங்கி அறையும்
கடற்காற்றின் அகோரம்

கூந்தல் கலைந்து
முந்தானை சடசடத்துப் பறக்க
நான்

எதுவும் கட்டுக்குள் இல்லை
மனது போல்

கிழக்குச் சூரியன்
முதுகிற்கு வெகுதூரமாய்.
எழுகிறேன்..
கரையைச் சொந்தமாக்க முயலும்
அலைகளை வியந்தபடி,

ஊடறு கவிதைகள்

மிதந்து செல்கின்ற கட்டுமரங்களைப்
பற்றியபடியும்
இடைக்கிடை நீந்தியபடியும்.
கண்களும் மனதும்
தொடுவானத்திற்கும் அப்பால்! ○மலரா

## ஒட்டுமொத்தமும்

உன் கனவுகளின் சுழற்சி மையம்
நான் எனும்போது
ஒரு விருட்சமாய்
என்னை உணர்கிறேன்

வருட வரும் காற்றை
இலையசைப்பதன்றி விரட்டுகிறேன்

கூவ வந்த குயில்கள்
குந்தக்கூட மனமின்றி
முகம் திருப்பிச் செல்கின்றன,
பெரும் அந்நியத்தை உணர்வதாய்.

அன்பே!
விருட்சம் மட்டுமல்ல
அதன் நிழலும்கூட
உனக்கு மட்டும்தான் ○மலரா

## உனது அண்மை

என்ன ஒரு நெருக்கம்...
சின்னச்சின்னப் பிரிதல்களில்
இன்னும் அது இறுக்கமாய்...

தென்னங்கீற்றின் சரசரப்பிலும்
வாசல் மல்லிகையின் அளைவிலும்
மாமரத்துப் பூச்சிரிப்பிலும்
நான் சுகிக்கிறேன்,
என்னுள் முற்றுமாய் நிரம்பிவிட்ட
உன் மூச்சுக்காற்றினை. ○மலரா

## உன் சந்நிதி

நான் அழிவேன்
நீயென்ற பெரும்சோதியுள்
கனலாய்.
நான் சுருள்வேன்
உன் காலடியில் குறுகியே ஒரு
மகவாய்.

தசையும் குருதியும்
ஆசையும் தாபமும்
அன்பும் நன்றியும் கொண்ட என்னை
உன்னுள் ஈர்த்துக்கொள் சக்தியே
நான் மீண்டும் மீண்டும் உயிர்ப்பேன்
உனக்குள்ளேயே! ○மலரா

# நீ அல்லது உனது வெளி

நீ உடன் இருத்தல்
நீ இன்றி இருத்தல்
இரண்டும் சுகமே!

உன் தோள்சாய்த்து
என் தலைமயிரை
நீ தடவிக்கொடுத்தலும்
நீ அற்ற பொழுதில்
அச் சுகம் நினைந்தலும்...

நீ அருகிருக்க
உன் வாசனை முகர்வதும்
நீ அற்ற வெளியில்
அவ் வாசைன உணர்வதும்...

உன் மடிமீதாய்
நான் துவளும் தூக்கமும்
பின் வெறுந்தரையில்
உனை நினைந்த தூக்கமும்...

உன் உடலுள் எனை
இறுக்கிக்கொள்ளலும்
தனியறையில்-தள்ளி-நான் மட்டும்
உன் நினைவின் கதகதப்பில்
இறுகிக் கொள்ளலும்...

என்னுள் நீயும்
உன்னுள் நானும்
வாழும் நாளெலாம் சுகமே! ○மலரா

# ஒரு குமரியின் பாடல்

கனவுகள் நுரைக்கும்
இந்த இனிய நினைவை
என்னிடம்
இரவல் தந்தது நீயா?
முன்பதாகவே
என்னிடம் கொஞ்சம்
கலகலத்த சிரிப்பும்
மௌனப் புன்னகைகளும்
எஞ்சிக்கிடக்கின்றன,
கண்ணீரையும்
காயங்களையும் கழித்து
எரிகாயங்களுடன் கிடக்கும்
தேகத்தையும் கழித்து.

கண்ணாடி முன் தெரியும்
இந்த அழகிய முகம்தான்
நீ அறிந்தது.
மனக்கூடு
அதி பயங்கரம்
நீ அதை
பார்த்து விடாதே
இந்த முகம்
அந்தக் கோரத்தின்
மேல் நின்று
சிரிக்கிறதே என்று
அதிர்ந்து போவாய்.

என் மனக்கனவில்
ஒரு குமரி இருக்கிறாள்
இதுவரை
எந்த ஜந்துவினாலும்
காதலிக்கப்படாதவள்
எந்த நிழலினாலும்
தீண்டப்படாதவள்
இன்னும்
காதல் கனவுகளில்
பரிணமிப்பவள்.

அவளிடம்
கனவுகள் நுரைக்கும்
இந்த இனிய நினைவை
இரவல் தந்தது
நீயா? ○பெண்ணியா

## அவசரக்குறிப்பு

உண்மைகளை எல்லாம்
அழுக்குத் துணிகளுக்கடியில்
ஒளித்து வைத்துள்ளேன்.
நான்
இறக்கவைக்கப்பட்டால்
என்
அந்தரங்க சிநேகியிடம்
இடத்தை
அறிந்து கொள்ளுங்கள். ○பெண்ணியா

ஊடறு கவிதைகள்

# காதல் நீலமான இரவு

இரவு நீளமாகிய போது
நட்சத்திரங்களின் பாடலைக் கேட்கிறேன்.
காற்றசைவில்
மரங்களின் சரசரப்பையும்
மூங்கில்களின்
ஊதுகுழல் ஓசைகளையும்
அவனின்
காதல் கவிதை ஒன்றினையும்
கேட்டு
மெல்ல மயங்குகிறேன்.

மெல்ல மெல்ல
இரவு என் மேல்
படியத் தொடங்கிய போது
நான் ஒரு
புகையென மாறி இருந்தேன்.

இரவின் தென்றலாக
என்னிடம் அவன்
வருகின்ற போதெல்லாம்
நிலவில் குளித்தெழும்பி
வனமெங்கும் மலர்களாய் மாறி
வாசனையைச் சிந்தித்தேன்.

தென்றல்
கால்களில் முத்தமிடத் தொடங்கிய போது
புகை
ஒரு பெண்ணாய் மாறத் தொடங்குகிறது. ○பெண்ணியா

# இலவு காத்தல்

தொடர்கின்ற
அலைகள்
வார்த்தைகளின்
ஞாபகங்களா?

தினந்தோறும்
படிந்து போகும் நினைவுகள்
ஏதோ ஒரு
பொருளில் அல்லது இசையில்
மீள நனைந்து அழிகின்றன.
மரங்களும் காற்றும்
பேசத் தொடங்கினால்
நமது உறவின்
ரகசிய உரையாடலை
உன்னிடம் சமர்ப்பிக்கக் கூடும் இன்று.
இருட்டும் அவர்களும்
அறிந்திராத உண்மைகள்
இன்னமும் ஊமையாய்
மனதெங்கிலும்
ஓங்கி ஒலிப்பதும்
பின்பு
வாயிலும் வயிற்றிலும்
அடித்துக் கொண்டு அழுவதும்
பின்
பிம்பங்களை உடைத்து விட்டு
உனக்குப் பிடித்த
முகமூடிகளை அணிவதும்
நிஜங்களாய்த் தொடர்கிறது.

ஊடறு கவிதைகள்

காதல் மரத்துப்போன
ஒரு சோடி
ஆண் கண்களிலிருந்து
காதல் வரும் என்று
இலவு காத்த கிளி ஒன்று
இன்னமும்
காத்துக் கொண்டே இருக்கின்றது. ○பெண்ணியா

## நிழல்

ஞாபகங்களை
இருந்த இடத்திலேயே
இருக்க விட்டு
எழும்பி நகர்கிறது நிழல்.

நிழல் நகர்கின்ற
சாலைகளெல்லாம்
ஞாபகங்களின் துர்வாடை
மரண ஞாபகம் என
பின் தொடர்கிறது நிழலை.

வீட்டின் கழிவறையிலும்
படுக்கையின் விரிப்பிலும்
ஞாபகங்களின்
நேரம் நீடிக்கும்.

முடிந்து விடுகின்ற
காலத்தின்
இருட்போர்வைக்குள்
நிழலையும் அறியாமல்
ஞாபகம்
அழுது கொண்டேயிருக்கிறது. ○பெண்ணியா

# புதிய உணர்வுகள்

துச்சாதனனால் துகிலுரியப்பட்ட
திரௌபதைகளல்ல
பெண்கள்
நாங்கள் இன்று.

பெண்களின் வெற்றியின்
படிக்கட்டுக்களை
வேடிக்கை பார்க்கும்
சமுதாயத்தின்
சம்பிரதாயத்திலிருந்து
சற்று விலகி...
புதிதான உணர்வுகளுடன்
புறப்படுகிறேன் - நாளை
நம் பெண்ணினத்துக்காய்
நாம் இந்த உலகிற்கு.

வேதனைகளால் விலங்கிடப்பட்டு
மூச்சுக்கு மூச்சு
முனகிடும் சத்தங்கள் - இன்றும்
மூலைக்குள்
முகவரியில்லாத முகங்களாய்
மூன்று முடிச்சுக்குள்
முட்டாளாகிய நாட்கள்
முடியட்டும்.

அடாவடித்தனமான
சமுதாய இம்சைகளை
அடக்கிடுவோம்
எதிர்காலங்கள் ஏணிப்படிகளாய்
எங்கள் கைகளில்! ○குமுதினி தங்கராஜா

# கவிஞர்களின் குசு

‘வெள்ளவத்தையில்
இப்படியான ஒரு மாலையில்
கடற்கரையில் நடக்கையில்’
இவ்வாறென் வாழ்வின் பாடுகளை
எழுதிச் செல்கையில்
கவிஞர்கள் ஏங்குகிறார்கள்
தாம் அதிலொரு இடையீடாய் இருக்க
மேலும் -எமது துரதிர்ஸ்டம்- அவர்கள் நம்புகிறார்கள்
எம் பிரதிக்கு
உயரியதொரு சிறப்பை
அது வழங்கிவிடுமென.
எனது கஸ்ட காலம்
சிறுமியாய் இருந்தபோது நான்
இவர்கள் பயணித்துக்கொண்டிருந்த
அந்தப் புகையிரத்தில் ஏறிவிட்டிருந்தேன்

ஊடறு கவிதைகள்

நச்சியக் கதைகளுடன் எவளுடையவோ காலத்தை
வீணாக்கிவிட்டு
ஆசுவாசமாய் திரும்பிக் கொண்டிருந்தவர்கள்
தனிமையில் குசு விட்டுக் கொண்டிருந்தார்கள்
அதுவுமில்லாமல் 'விட்டது வேறு யாரே?' என்பது போல
பாவனையில் இருந்தார்கள்
வழியெங்கும்
விரித்துப் படிக்கும் எந்த நூலிலும்
தமது நோயுற்ற 'கவிதை'களையே
கண்டு கொண்டிருந்தார்கள்
நாற்றமெடுத்த இரயில் பெட்டிக்குள்
அவர்களுடன்
நானொரு சிறுமி - இருந்தாலும்,
'இவளொரு நாள் பெரியவள் ஆவாள் -பிறகு...'
என்ன ஒரு இனிய கனவு!
போகையில் எதற்கும் இருக்கட்டுமென்று
விட்டுச் சென்றார்கள்
அவர்களது கவிதைகளை.
பரவுண்ட நாற்றம் போக்க
யன்னல்களைத் திறந்துவிட்டு -அவற்றை
நானெடுத்துப் படித்தபோது
அக் கவிதைகளில் அவர்கள் குசு விடும் சத்தத்தைக்
கேட்டேன்.
பிறகெப்போதோ
பெரும் கூட்டங்களில் அவர்கள்
'ஒரு நல்ல கவிதை எப்படி இருக்கும்?'
என்றுகொண்டிருந்தபோது -
'குசு விட்டுக் கொண்டு!' என்று சொல்லிச் சிரித்தேன்
அப்போதும் நான் சிறியவளாய்த்தான் இருந்தேன்
மிகவும்! ○ கற்பகம் யசோதர

கற்பகம் யசோதர

# இரு கால அழைப்பு

01

யன்னலூடே
அம்புறுலங்காவின் உவப்பூட்டும் இனிய மணம்
மழை நீர் கொண்ட மரங்கள்
தம்மையாட்டித் துவட்டியபடி.
தொலைபேசி ஒலிக்குதில்ல
எடுப்பானா மாட்டானா...
தனதான வேலைகளுள் தொலைந்திருப்பானா
நனைகிற வயசை
மனசைக் கடந்து
விழி விரிய...
'திவா! உனை யாரு அழைக்கிறார்கள்?'

02

யாருமில்ல-
அந்தப்புரத்தின் எண்ணற்ற நங்கைகளில்
ஒருத்தியிடம்
சேவகன் ஏதும் சொன்னானில்லை
(சேவகனைப் புணரு)
தலை தேய்த்துத் தோயவிட்ட தோழி
நாம் பேச ஒன்றுமற்றுப் போய்விட்டது
(தோழியைப் புணரு)
...
பெருஞ்சாலைகளில் துணை வருகிற ரத்த உறவானவளிடம்
உதட்டின் சுவை உணரக் கேட்கத் தயக்கம்
(அவளைப்...
○கற்பகம் யசோதர

ஊடறு கவிதைகள்

(தலைப்பிலிக் கவிதை)

நான் கடவுளின் ஒரு பகுதி
அல்லது நான்தான் கடவுள்
அகண்ட தொடைகளுள்ளிருந்து
சிசுவை இழுத்தெடுக்க -
ஆக்குகிறவள் நான்.

பிஞ்சு அதன் கால்களை இழுத்து
சுவரில் மோது(கி)றபோது
அழிக்கிறவள் நான்
காலமெல்லாம் அகாலிக்க
போர்களும் எவரோ நிறுவியனவும்
தோற்கடிக்கையில் திருடும்
பொருளாக்கின என்னை
யார் யாரினதோ தோற்கடிப்புகளின்
நினைவூட்டுகை ஆனேன்.

பெண் குறி
சாத்தானின் வழி
துர்க்குறி.
தொடைகள் அகண்டு கிடக்க
சட்டத்துடன் நுழைய
தேவியாய்,
தொடைகள் அகண்டு கிடக்க
விலை விசிறி நுழைய
மூலை முடுக்குகளில்
வேசையாய் வைப்பாட்டியாய்,
தெருவோரம் நின்று
சிறிதளவு அன்பிற்காய்
மண்டியிட்டிருந்தவள் நான்.

கற்பகம் யசோதரா

ஊடறு கவிதைகள்

இன்றோ-
நான் யார் யாரோ
நினைப்பிற்கும் 'ஆட'ப் பிறக்காத்
தாடகை சிறாம்பி!
கடவுளின் ஒரு பகுதி
அல்லது நானே கடவுள்.
இத் தற் பிரேமங்கள் குறித்து
எதுவும் பேசாதே.

என்றைக்கோ
எனக்கான முத்தங்களைக்
காற்று விழுங்கிவிட்டது
என்னை என்னால்
கைவிட முடியாது, முடியவில்லை. ○கற்பகம் யசோதர

## பிள்ளைகள் தேவை

உனது பிள்ளையை அவர்கள் கொண்டு போனார்கள்
வீட்டு முற்றங்களிற்கு யுத்தம் வந்த போது
போரிடப் பிள்ளைகள் தேவையானார்கள்.
வாகனங்கள் புழுதி கிழப்பிச் சென்ற தெருக்களில்
உனது கடைசிப் பிள்ளையின் வாசம் வந்துகொண்டிருக்க
நெஞ்சடைத்து நீ விழுந்தாய்
ஆஸ்பத்திரியில் அவனது வரவை
ஒருபோதுமே அறிவிக்காத சுவர்களுக்குள் உயிரை விட்டாய்

உன்னை அவர்கள் எடுத்துச் சென்றபோது
பிள்ளையை நினைத்து நினைத்துப் போன தெருக்கள்
துயரத்துடன் அழுதன
கண்ணீர் சிந்திச் சிந்தி தடம் கீறும் கன்னங்களில்
மீசை முளைத்திராத பிஞ்சு முகம் மோதி மோதி அழுதது

ஊடறு கவிதைகள்

பூவரசம் பூத்திருக்கும் காலமாயிருக்குமா இது...
கொண்டல் பூக்கள் தொங்கும் ஒய்யாரத் தெருக்கள்
துயர் கொண்டு அழுதன
கிராமத்துப் பறவைகள் வானில் சிலகணம் அந்தரித்து நின்றன
உனது பருவ மகன் தன் ஆசைகளை அள்ளிப் போட்ட
தாய்நிலத்தில்
சலனமின்றி விரைந்த வாகனத்துள்
-எங்கிருந்தோ ஒரு கழுகு நிழலாகத் தொடர -
அவன் அழுதுகொண்டே போனான்
உதடு பிதுக்கிப் பிதுக்கி
முலையைக் கொடுத்தால்
இப்போதே
குடித்து விடுவான் போன்ற முகத்துடன் -
கடைவாயில் பால் கசிய.

கொடியில் ஈரம் உலரா சேர்ட்டுகள் காற்றில் உதறி உதறி
விசும்பின
சலுகையுடன் அவன் நின்ற தூணும்
சாய்ந்திருந்த சமையற்கட்டும் அவனைத் தேடின
ஊளையுடன் அவர்களை நாய் தொடர்ந்தோடிய முற்றத்தில்
தம் உயிர்த் தோழனின் பிரிவை
மாமரங்கள் குளறித் தீர்த்தன
- நீ அவனது நினைவுடன் இறந்தாய்.

காசிநாத,
அவர்கழழைக்கிற ஓர் புனித தினத்தில்
உள்ளே அவனது சதைத்துண்டு இருப்பதறியாத் துண்டுநிலத்தில்
உன் மனைவி தீபங்களை ஏற்றி வைக்க
இனி நீ அழ வேண்டி வராது
உனக்கு முன்னால் அவன் போன கனத்தை
உன்னோடு சுமக்க வேண்டியதுமில்லை
நல்லதொரு சாவு!
யாருக்கும் வாய்க்காது ○கற்பகம் யசோதர

கற்பகம் யசோதரா

## முக்கிய அறிவிப்பு

இலக்கணங்களையும்
மொழிப் புலமையையும்
நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்
எம் உணர்வுகளைப் பேசிட
கொஞ்சம் சொற்கள் போதுமெமக்கு

ஒலிபெருக்கிகளும்
மேடைகளும்
உம்முடையதாகவே இருக்கட்டும்
எம் உண்மைகளைக் கேட்க
கொஞ்சம் செவிகள் போதுமெமக்கு

கேளிக்கை விடுதிகளையும்
விருந்து மண்டபங்களையும்
நீங்களே நிரப்பிக் கொள்ளுங்கள்
இயல்பாய் மூச்சுவிட
கொஞ்சம்திறந்த வெளி போதுமெமக்கு

பட்டங்களையும்
விருதுகளையும்
நீங்களே அணிந்து கொள்ளுங்கள்
எம்மை கௌரவிக்க
எம் அடையாளங்கள் போதுமெமக்கு

ஊடறு கவிதைகள்

இன்னும் நம்பிக் கொண்டிருக்காதீர்கள்
வாழ்க்கைப் பந்தயத்தில்
உம் சுமைகளையும்
யாமே சுமந்தபடி ஓடி
இனிமேலும்
உம்மை முந்த விட்டுக் கொண்டிருப்போம் என்று

ஏனெனில்
நாங்கள் பாடங்கற்றுக் கொண்டது,

உமது வெற்றியிலிருந்தல்ல
எமது தோல்வியிலிருந்து

உமது சுகங்களிலிருந்தல்ல
எமது வலிகளிலிருந்து

உம் சுதந்திரத்திலிருந்தல்ல
எம் கட்டுகளிலிருந்து

புரிந்து கொண்டு பகிர்ந்து கொண்டால்
ஒன்றாய் ஓடுவதில்
எமக்கொன்றும் ஆட்சேபனையில்லை

உணர்ந்து கொள்ளும் மனப்பக்குவம்
உமக்கில்லையெனில்
முந்திக்கொண்டோட வேண்டியிருக்கும்

இது எச்ச்ரிக்கையில்லை
உம் மீது கொண்ட
அன்பின் மிகுதியால்
வெறும் அறிவிப்பு மட்டுமே! ○உதயச்செல்வி

உதயச்செல்வி இந்தியா

# இன்னும் பிறக்காத எனது குழந்தைக்கு

விழுமியங்கள் என்று என் பெற்றோர் எல்லாவற்றுக்கும்
உழுத்துப் போன பழைமைத் தனங்களையே
காவித்திரிகின்றனர்.

அவை காட்டுமிராண்டித் தன்மையான
அவை இக்காலத்திற்கொவ்வாத பழைமையானவை.
இன்னும் பிற்போகானவை.
என் தங்கை என்னைவிடத்
துணிவுள்ளவளாக இருப்பாள்
என்பதை நான் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.
இதுவரை என்னுள் மனம் புளுங்கிக் குமைவதெலாம்
என் தங்கை நேரில் பேசிவிடுவாள்.
ஆம், எனது பெற்றோர் முதற் பரம்பரை
நான் இரண்டாம் பரம்பரை
என் தங்கை மூன்றாவது

இறுதியாக...
தங்கை: அம்மா, கருக்கலைப்புப் பற்றி நீங்கள் என்ன
நினைக்கிறீர்கள்?
அம்மா: அது மிகவும் குரூரமானது, ஒரு குழந்தையைக்
கொல்வதற்கு யாருக்கும் உரிமையில்லை -அது
கடவுளின் விருப்பத்திற்கு எதிரானது.
அப்பா: ஒரு கருக்கலைப்பு என்பது இளையோரின்
பக்குவமடையாத,
சிறுபிள்ளைத்தனமான செயல் -அது
இந்த இளைஞர்களின் கண்டுபிடிப்புங்கூட.

தங்கை: என்னதான் சொல்லுகிறீர்கள்?
அப்பா: இதைப்பற்றி நான் தெளிவுபடுத்துவது சிரமம்
அம்மா: நாங்கள் வேறு ஏதாவது கதைப்போம்.

நான் நினைக்கிறேன்
நான் இதனை ஏற்கத்தான் வேண்டும்.
என் அம்மாவும் அப்பாவும் நினைப்பதிலும் அவர்கள்
சொல்வதிலும் நியாயம் இருக்கலாம்.

இன்னும் பிறக்காத எனது குழந்தைக்கு
என்னால் உனக்குப் பின்வருவனவற்றைச் சொல்ல முடியும்

-மூச்சை அடக்கிவிடும் காற்று அவற்றின்
இரசாயனக் குறியீடுகூட
எனக்குத் தெரியாதபடிக்கு என்னை ஆக்கிரமிக்கின்றன.
-நீ ஒரு பெண் சிசுவாகக் கிழக்கில் உதித்திருந்தால்
கள்ளிப்பால் கொண்டு கொல்லப்பட்டிருக்கவும் கூடும்.
-மேற்கில் பிறந்திருப்பாயானால் பிரிவுறும்
பெற்றோரின் இடையினில்
துயருற்று அதற்கே பலியாகிப் போயிருப்பாய்.

ஊடறு கவிதைகள்

-நமது தந்தை, சகோதரன், மாமா என்ற
எவர் மீதும் ஒரு பெண் நம்பிக்கை கொள்ள முடியாத
ஒரு உலகமாக இது இருக்கிறது.
-உன் தோல் நிறம் கறுப்பாக இருந்தால்
புறக்கணிப்பில் நீ தனித்துப் போயிருப்பாய்.

-தனிமையில் வயதேறிப் போகும் உலகம் இது.
-மனிதர்களின் பிரிய நண்பர்களாக பிராணிகள்
இடம் பிடித்திருப்பதும் இங்குதான்.
தமது சந்தோசம் என்று வரும்போது
பலியிடப்படுவதும் இங்குதான்.
-பணம் படைத்த கொஞ்ச மனிதர்களின் உலகம் இது
எஞ்சிய ஏழைகளின் கூட்டமும் அவர்களுக்கே.

-ஒரு உலகம் ஒன்றில்லாத கடவுள்கள்
இங்கு நல்லவை குறைந்து,
அநியாயங்கள் மலிந்து வழிகின்றன.
-ஒரு உலகம், இங்கே பணமே
மனிதர்கள் மீது ஆட்சி நடத்துகின்றது.
-கணனியும், கைத்தொலைபேசியும் சக மனிதனைவிட
பெறுமதியாகிப் போன ஒரு வாழ்வு.
-இப்பொழுதெல்லாம் குற்றவாளிகள் பெருகிப் போய்
சிறைச்சாலைகளே போதவில்லை.

இனி:-
நான் நினைக்கின்றேன்
அனேகமாக கருக்கலைப்பிற்கு ஒரு காரணம் இருக்கலாம்
எனக்கோ ஆயிரம் இருக்கின்றது.
என்னை மன்னித்துவிடு
எனக்குப் பிறக்காத குழந்தையே ○சத்தியா சத்தியதாஸ்

அரங்கமல்லிகா இந்தியா

இந்தியாவில் உள்ள
தமிழ்நாடு மாநிலத்தில்
அமைந்திருக்கும் திருச்சி
மாவட்டம் அருகிலுள்ள
கொண்டயம்பேட்டை கிராமத்தில்
வசிக்கும் தலித்துகள் மத்தியில்
உள்ள வட்டார வழக்கோடு
உழைக்கும் ஓர் அம்மாவின்
வாழ்க்கை எதார்த்தத்தைக்
கவிதையாகத் தந்திருக்கிறார்
அரங்கமல்லிகா

## உழைப்பு

அருவம்புல் தேடி
அம்மங்கோயில் திடலில்
தாடை வழிந்தோடும்
வேர்வையுடன்
குனிந்து அறுக்கும் அம்மா

வாழக்கொள்ள
வரப்பு ஓரம்
ஆடு மேய்வதாய்
அறுத்துக் கட்டிய
புல்லுக்கட்டை சுமந்து

ஊடறு கவிதைகள்

சந்தை மேடு தாண்டி
காவாய் குறுக்கே பாய்ந்து
காளை மாடு போல
விர்சா நடப்பத
நினைத்துப் பார்க்கிறேன்.

காய்ந்த வறட்டியாய் வயிறு
தாகத்தைக் கக்கும் நாக்கு
முற்றத்தில்
புல்லுக்கட்டை இறக்கி
நிமிர முடியாமல்
களைப்போடு
தண்ணீ கேட்க...

பதில் ஏதும் சொல்லாமல்
முகம் திருப்பிச் செல்லும்
மருமகளை வேடிக்கை பார்க்கும்
பக்கத்தூட்டு இளஞ்சியம்,
'கட்டுக் கட்டாய் புல்லு சுமந்து
கழுத்து நரம்பு
குறுக்கே வெட்டப்பட்ட
கோரைப் புல்லாய் அறுபட
உனக்கென்ன தலையெழுத்து?'
பரிவோடு கேட்கிறாள்.

யாரோட ஒழப்பிலயும்
ஒக்காந்து சாப்பிட
நானென்ன சத்திரவாசியா? ○அரங்கமல்லிகா

## இயற்கையின் பேரூற்று

உயிரோடு புதைப்பாய் என்னை
பசிய புற்களுக்குக் களமாகி
வள நிலமாய் பரவிக் கிடப்பேன்
என்னைத் தீயிட்டும் கொளுத்தலாம்
நெருப்பாலான புறாவாகி
வெளியெங்கும் பறந்து திரிவேன்
மந்திரக்கோலால் பூதமாக்கி
குப்பிக்குள் அடைத்து வைக்கலாம்
பாதரச ஆவியாகி
வானமாய் உயர்ந்து நிற்பேன்
நீரை நீருக்குள்
அமிழ்த்தி வைப்பதைப்போல
காற்றுக்குள் கரைத்து விடலாம்.
அதன் அத்தனை பக்கத்திலிருந்தும்
சுவாசமாய் வெளிப்படுவேன்
உன் அரண்மனைச் சுவர்களில்
சித்திரமாகச் சட்டமிடலாம்
காட்டாறாய் வழிந்து
உன்னைக் கடந்து போவேன்
நானே நிலமாகி
நானே நெருப்பாகி
நானே வானாகி
நானே காற்றாகி
நானே நீராகி
அடைக்க அடைக்கப் பீறிடுகின்ற
பிரபஞ்சத்தின் ஊற்றுக்கண் நான். ○சுகிர்தராணி

# எதுவும் மிச்சமில்லை

சிந்திய அமிலமாய் கண்ணீர் வழிய
பதுங்கறைக்குள் ஒளிந்திருந்த பொழுது
விழுந்த ஷெல்லினால்
குமைந்த என் கல்வீடு
கடைவீதியின் கால்வாய் ஓரம்
அழுகிய சடலமாய் கிடந்த கணவனின்
இரத்தம் தோய்ந்த பொத்தல் சட்டை
பள்ளியிலிருந்து திரும்பி வருகையில்
வல்லுறவால் உயிரிழந்த மகளுக்கு
வாங்கி வைத்த துணிநாப்கின்
கள்ளத்தோணியில் அனுப்பி வைத்தும்
மணல்திட்டில் மாட்டிக் கொண்ட
அகதிமகனின் மரணஓலம்
சேலைத்தலைப்பில் முடிந்துவைத்த
குருதி நனைத்த பிறந்தமகன்
குண்டு வெடிப்பால்
முலைகள் இரண்டும் பிய்ந்த மார்பை
ஒட்டியிருக்கும் எனது உயிர்
பஞ்சடைந்த எனது கண்களுக்கு
படமாய் விரிகின்ற தனிஈழம்
இவை தவிர
எதுவும் மிச்சமில்லை என்னிடம் ○சுகிர்தராணி

# உப்பின் சுவையூறிய காதல்

தயக்கத்தின் முட்டைகள்மீது
அமர்ந்திருக்கிறது நம் காதல்

எங்கோ ஓரிடத்தில்
மென்மையின் நரம்புகள் பூட்டப்பட்ட யாழை
நீ மீட்டிக் கொண்டிருக்கலாம்.

என் வருத்தங்கள் யாவும்
கால் நனையாமல் நீ உலவும்
கடற்கரைப் பொழுதுகள் குறித்துதான்

உயரத்தில் பூக்கும்
கள்ளிப் பூக்களை உனக்குக் காட்டியிருக்கிறேன்

கடலில் குதித்துக் கரையேறும் சிறுபுயலை
உள்நின்று அறிமுகப்படுத்தி யிருக்கிறேன்

காமம் துளிர்விடும் சாயுங்காலம்
சருகுகள் பூத்துக் கிடக்கும் சாலைகளை
நத்தையின் கால் கொண்டு கடந்திருக்கிறோம்

கொடுரமாய் பறக்கவிடப்பட்ட என்னுடலை
சொல்லின்
கனத்த நங்கூரத்தால் பிணைத்தபோதெல்லாம்
நீயும் உடனிருந்தாய்

பசியின் பழச்சாற்றினை நீ அருந்துகையில்
புத்தகங்களைப் பரிசளித்திருக்கிறேன்

இப்போதும் நீ பற்றியிருக்கும்
பிரியத்தின் கோப்பைகளில் மிதக்கின்றன
என் கவிதைத்துண்டங்கள்

வேறு எப்படி சொல்லச் சொல்கிறாய்
உப்புக்கரிக்கும் என் காதலை ○சுகிர்தராணி

இந்தியா

சுகிர்தராணி

ஊடறு கவிதைகள்

# சாம்பல் பூக்காத முத்தங்கள்

நதிகள் பாய்கின்ற ஈரநிலத்தில்
பரிவாரங்களோடு காத்திருக்கிறாய்
வனாந்தரத்தில் வழிதவறிய பெண்ணை
நீளவாக்கில் உரித்த தோலாலானது
உன் கூடாரம்
தொங்கும் அவள் முலைகள்
சர விளக்குகளைப் போல
வெளிச்சத்தை வீசுகின்றன.
அறுக்கப்பட்ட தொப்பூழ்க்கொடியை
மதுவருந்தும் குவளையாக்கி
என்னை வீழ்த்திடத் துடிக்கிறாய்
நிலவு சயனிக்கின்ற சாமத்தில்
கீழேவிழும் நட்சத்திரங்கள்
மீண்டும் வானமேகா என்பதையும்
குளிர்ச்சி பொருந்திய அரும்பினை
அவிழ்த்து விட்டுச் செல்வது
தென்றலாக இராது என்பதையும்
நீ கண்டடைந்திருக்கலாம்
என்றாலும்
என் மார்பிலிருந்து பெருகிய
காதல் நீரோட்டங்கள்
உன்னிலிருந்து விலகும்பொழுதில்,
வெம்மை படர்ந்த விருட்சத்தின்
உரிகின்ற பட்டையைப்போல்
என் உதட்டிலிருந்து
கழன்று விழுகின்றன
சில சாம்பல் பூக்காத முத்தங்கள் ○சுகிர்தராணி

ஊடறு கவிதைகள்

# வாழ்ந்து முடிந்த கதை

புரிந்து கொள்ள முடியாததின் மீது
உயிர் உறைவதும் கரைவதுமாய்
ஒடுங்கி ஒடுங்கி நீள மறுக்கிறது மனது

மிக மிக இரகசியமான எனது
உணர்வுகளின் மீது
சுவாரசியமான நிறங்கள்
தோன்றுவதும் மறைவதுமாய்
கழிகிறது பொழுது

எப்படி இருக்கிறாய்?
இப்படி ஆரம்பிப்பதில் கூட
சிக்கல்கள் இருக்கிறதெனக்கு

மகிழ்வதும் துயருறுவதுமாய்
தெருவோரத்திலிருக்கும்
இலைகளற்ற மரங்களை
நினைவு கொள்ளச் செய்கிறது வாழ்வு

மழை பெய்து ஓய்ந்த
ஒரு நடு இரவில்
அவாவித் தழுவி
நிராகரித்து நிமிர்ந்து
எழ முடியாது
புணர்வாய் கிழிந்து
புலர்கிறது காலை

சில வருடங்களுக்கு
முன்பான காலங்களில் நீ
எந்தப் புள்ளியில் விட்டுப் போனாயோ
வாழ்ந்த அதே புள்ளிலேயே
கொண்டுவந்து விடுகிறது சமூகம். ○தில்லை

சுவிஸ்

தில்லை

# வரி மங்குகிற நினைவு

பொட்டுப் பொட்டாகத்
தாடை விளிம்பில் தொங்கிற்று
ஆற்றுக்கு அந்தப் பக்கம் நிற்கிற
வாழ்வின் புலம்பல்

அரசல் புரசலாக
ஊர்க்காதில் விழுந்தும் விழாததுமாக
காற்றின் இறுக்கம் தளர்ந்திருந்தது.
வயல்வெளிக்கு நடுவில் போகும்
தென்னைகள் ஓரமிட்ட சாலையில்
தலை கிடந்த அலங்கோலத்தில்
விரல்கள் பதிந்த கன்ன நோவில்
நுரையீரல்களும்,
விலா எலும்புகளும்
நொறுங்கிய மூச்சடைப்பில்
ஒரு குரல்
நடுங்கி நடுங்கி வீழ்ந்தது

அவர்கள்
உட்கார்ந்திருந்த தரையை இழுத்து
அந்தரத்தில் தொங்கவிட்டார்கள்
குளத்தையும் ஏரியையம் தூர்த்துக்
குப்பை கொட்டினார்கள்
குப்பைகள் எரிந்து
கட்டைக் கரியும் புகையுமாக
நெடி வீசிற்று
அதனூடு அவர்கள் வாழ்க்கையின் வாடை வீசிற்று

இன்னும் இன்னும்
இரத்தக் குட்டைகளில் மயிர் உறைந்து
எனக்கு நாக்கு நுனியில் வந்துவிட்டது.
மறுகணம் என் தாகம் அடங்கி
சாம்பலாயிற்று. ○தில்லை

# புதிய பூமியோடு

சுவாசத்தில் எரிந்து கொண்டிருக்கும்
தீச்சுவாலையை ஆசுவாசுப்படுத்திவிட்டு
புதிய பூமியோடு வாழ்வதற்காய்
மனதை புதுப்பித்துக் கொண்டு
சின்ன நம்பிக்கையோடு
அசட்டு சந்தோசத்தோடும்
வீறுநடைபோட எத்தனித்தபோது
புரிந்தது எமக்கு,
முன்னாலே சாக்கடையாய்
மனித மனங்கள் நாறிக் கிடக்கின்றனவென்று.

உயிர்களைக் கொன்று
பழிதீர்த்துக் கொள்ளும் அற்புத
பகுத்தறிவுகளாகவே இன்னும்
வலம்வந்து கொண்டிருக்கும்
இவைகளிடத்திலே நாமும்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
உள்ளே எழுகின்றன
சில வினாக்கள்
யாராய் எப்படி
வாழப்போகிறோமென்று.

இரத்தவாடைகளை சுவாசித்துக் கொண்டு
இயலாமைகளை சுமந்து கொண்டு
துரோகங்களை சகித்துக்கொண்டு
இரத்தக் கண்ணீர் வடித்தபடியே
இன்னும் எத்தனை நாட்களுக்கு
அப்பாவிப் பொதுமக்களாய்
புதிய பூமியை எதிர்பார்த்தபடியே
வாழ்வது? ○ நா.மரிய என்டனீட்டா

# முகாரி ராகங்களாய் பெண்கள்

தன் பக்க நியாயங்களை எடுத்துக்கூற
பெண்ணுக்கிங்கே வாய்ப்புகளில்லை
வரையறுத்து
வட்டமிட்ட எல்லைக்கோடுகளை
மீறுவதாய்
குற்றச்சாட்டுகள் எழுந்து
தலைவிரித்தாடும்.

நியாயங்களின் வாசல்கள்
பெண்ணுக்கிங்கே
மூடப்பட்டு விடுவதை
அனுமதிக்க முடியவில்லை -அதற்காய்
போராடவும் முடிவதில்லை
மீறியும் போராடினால்
'வேலையற்ற முட்டாள்கள்' என்றொரு
உயர் பல்கலைக்கழகப் பட்டம்.

ஊடறு கவிதைகள்

எட்டாமலே போய்விட்ட
கனவுகளோடு
காலங்களையும் சூழ்நிலைகளையும்
இன்னும் எத்தனை நாட்களுக்கு
குற்றவாளிக்கூண்டில் நிறுத்தமுடியும்
என்பது மட்டும் தெரியாமல் போகிறது,
பெண்ணுக்கும் பெண்மைக்கும்.

ரணப்பட்டுப் போன காயங்களுடன் வாழும்
பெண்கள் இன்னும்
கண்காணிக்கப்படுகின்றனர் சந்தேகத்தீவிரவாதிகளால்.
எத்தனையோவற்றை சாதித்தாலும்
இன்னுமின்னும் பெண்கள்
சோதிக்கப்படுகின்றனர் சந்தேகப்பிரியர்களால்.

எல்லாம் சுமந்துகொண்டாலும்
இன்னும்
பிரச்சினைகளை சுமையாக்கி
ரசிக்கின்றனர் சந்தேக ரசனையாளர்கள்.

எத்தனை பாரதிகள் வந்தாலும்
எத்தனை பெண்கள் உரத்துப் பாடினாலும்
எத்தனை பெரியார்கள் கோஷமிட்டாலும்
தப்பிக்க முடிவதில்லை
சந்தேகக் கண்கொண்ட கழுகுகளிடமிருந்து.

ஆயுதமில்லா
உள்ளத்து போராட்டங்களுடன்
வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறனர்
உள்ளுக்குள்ளே உடைந்தபடியே.
○நா.மரிய என்டனீட்டா

ஊடறு கவிதைகள்

## அகதி

என்
சுட்டு விரல் பட்டு
சிலிர்க்கும்
வேலியோர மொட்டுமல்லி

விட்டு விட்டு
பூத்தூவும்
மேகப்பஞ்சு

அலுக்காமல்
என்னோடு ஓடி வரும்
ஒற்றை நிலா

வரும் போதெல்லாம்
தலை சிலுப்பி
வரவேற்கும்
முன் வாசல் வேப்ப மரம்

என்
கவிதை பொறுக்கி
கிறுக்குப் பிடித்த
என்னறை
ஜன்னல் கம்பி

நான்
காதலோடு வந்தமரும்
மருதமரப் பந்தல் பதித்த
நதிக்கரை

ஒன்றும் ரசிக்கவில்லை...
எல்லாமே
எனக்கு அந்நியமாய்,
எனக்கெதிராய்
சதிசெய்வதாய்...

என்
உயிர் முளைத்து
சடைத்த என் தேசம்
எனக்கினி சொந்தமில்லை!

○ சமீலா யூசுப் அலி

# சிலுவை

நிலவில் குந்தியிருந்து
நட்சத்திரங்களில்
முதுகு சாய்த்து
கவி தைக்கும்
என் தோழர்களே!

என்
தேசத்தில்
தென்றல் நின்று விட்டது.

பூக்கள்
சொரிந்த
ஓர்கிட் செடிகள்
பனித்துளி
உறங்கிய
பச்சைப் புல்வெளிகள்
ஹைகூ பாடிய
ஏரிக்கரை
நாணற்புதர்கள்

எல்லாவற்றையும்
சிலுவையில்
அறைந்தாகி விட்டது.

காற்றை
சுருக்கிக் கொண்டே
வந்து விழும்
குண்டுகளின் இடைவேளையில்

முகங்களை
பச்சை ரத்தத்தால்
போர்த்திக் கொண்டே
சடலங்களின் நடுவில்

உயிர் வேரை
உசுப்பிக் கொண்டே
தாழப்பறக்கும்
இயந்திரப்பறவையின்
இரைச்சலினூடே

என்
கவிதை
உயிர்த்தெழுகிறது.

○ சமீலா யூசுப் அலி

# நாணல் சிறகுகளில் என் நயனங்கள்

விலங்குகளுடையவையன்றி
மனிதர்களின் குரல்கள் பற்றி...
மோனத் தவங்கள்
ஏகாந்த மகிழ்வுகள்
நிகழ்வுகளுடனான குலைவுகளின்றிய
என் வாழ்வியல்
சிதைந்து கிடக்கிறது

மானிடரே
போலிகளைத் தரித்துக் கொண்ட
மரங்களையும்
வேடமிட்டு வேடமிட்டு
திலகங்களாய் ஆன
மலர்களையும்
மத்தியிலான எனது இருப்புக்களையும்
சாவுகள் பற்றிய பயம் கொண்ட
இரவுகளில்
மனம் நினைத்துக் கொள்கையில்
மூளை நரம்பொன்று
அதிர்ந்தடங்குகிறது.

என் மொட்டுக்களை
நான்காம் கண்ணுடனான
முதலைகளுடன் -ஒப்படைத்து
-------

ஊடறு கவிதைகள்

கூடுகள் தாவிய
எதிர்கால வனதேவதையின்
ஊர்வலத்திற்காய்
உங்கள் காத்திருப்புக்கள்
மெல்லிய சவ்வுகளை
கீறும் நகங்கள்
பிண்டங்களுடனான அறிமுகம்
எனை பெண்ணென்றால்
'இறையே தவறுடையான்'

தெரிந்து கொள்க
நுரைகள் நொதிக்கப்பட்ட
பின்னிரவிலேதான் - என்
பிறவியெடுப்பு ○சலனி

## கரு மேகங்களும் காக்கனாங் குருவிகளும்

என்னைக் கூப்பிடாதீர்கள்
கவிதைக்குள்
மூழ்கிப் போயிருக்கையில்...

வெறுமை சூடிக்கிடக்குது என் வானம்
உடுக்கள் விழுந்து
என் புறவாயில் - கடல்கள்
கரையோர மணல் வீடு
இந்நேரம் இடிந்திருக்கும்
உருகியொரு நுரையுடன்
நொதிக்கப்பட்டு
கடல்களின் வீரியத்தைக் கூட்டியிருக்கும்

ஊடறு கவிதைகள்

மணல்கள் சிதறியடிக்கப்பட்டு
கண்மணிகள் கருக்கிக் கொண்ட
என் முற்றமும் - எல்லாமேதான்,
என் கவிதையும் தான்

கருக்கு மணிகள் விழுங்கி
விக்கிச் சோர்ந்து
தொண்டைப் பாதாளத்தில்
சாவின் கணங்களுடனான -என்
பெயர் உச்சரிப்பு

கழுகுகளின் விரலிடுக்கில்
நசுக்கிக் கொன்று
திகிலூட்டும் - மூசாப்பு
தாவிய சாம்பல்
வர்ணப் பார்வை

பேரலைகளின் ஆர்ப்பரிப்புடனான
தனிமையில் ஏகாந்த ஒப்பந்தத்தில் - என்
நிழல்களை தேடிய
பாதங்களின் அழைப்பு

வேண்டாம் - வேண்டவே வேண்டாம்!
நான் திரும்பிப் பார்க்கப் போவதில்லை
நீங்களெல்லாம் சாகிப் புழுக்கும் வரை.
○சலனி

# வெள்ளை நடனம்

அன்பே
உன்னவனுடனான மார்புச் சூடு
நட்சத்திரத் தரிசனம்
மலர்களின் நேசம் - பற்றிய
கனவுதலுடன் நீ

சிலந்திகளின்
எச்சங்களை
உயிர் நுனியில்... இழையில்
கட்டி
வெற்று வழியில்
உலகங்களை அளக்க - நான்
ஓடி வருகையில்
நீ அவனுடன்
கற்பனித்து நின்றாய்
நிலையோரச் சாய்வுகளில்
உம்மாவின் குரல் மறுதலிப்புடன்

கவிதை...கற்பனை...நவீனம்
அதீத ஞான தீட்சையுடன்
உபந்நியாசியாய் நான்

இமைகளில் நிழலுருவங்கள்
விம்ப மாற்றம் நிகழ்த்தியும்
விழிப்புகளில்
நரி விரட்டப்பட்டு நீ
சலிப்புடனான எனது
நச்சரிப்பிலும்
'விபச்சரித்து' அவனுடன்
நிலவின் கறுப்பு முகங்களின் பிரதிநிதி

உனைக் கண்டதால்
தொடக்கிறுத்து
குளித்துக் கொள்கிறேன்
முழுக்கறுகிறது ○சலனி

## அப்பா

சாதாரண அரச உத்தியோகத்தரின்
ராஜகுமாரி நான்
இரண்டறை அரண்மனைக்கு
சொந்தக்காரியும் கூட!

வேண்டுவனவெல்லாம் கிடைக்கும்
கற்பகதருவின் ஏகபுத்திரியென
அழைக்கப்படுபவள்.
'அப்பா பிடிக்கும்
அம்மா பிடிக்காது'
வெளிப்படையாகச் சொல்லித்திரியும்
சுதந்திர ஊடகம் நான்.

'உனக்குச் சித்தி வரக்கூடும்'
அம்மா அழுத போதும்
நானோ தீவிர 'அப்பா ஆதரவாளி'.
மனிதமும் காதலும் ரசனையும்
கோபமும் தாபமும்
இன்னும் இன்னும் இன்னும்
அப்பாவின் எல்லாமும் கொண்ட
வீரிய விந்தொன்றின்
வெளிப்பாடு நான்.

அப்பாவின் காதல்கள்-
இரவு நேரக் கதைகள்
அப்பாவின் கண்ணியம்-
என் பகல் நேர வியூகம்

அம்புலிமாமா சந்திர மாமாவிற்கு முன்னமே
பாரதியையும் கார்ல்மாக்ஸையும்
தெரிந்து கொண்ட
அதிர்ஸ்டசாலி நான்.

எல்லாம் அப்பாவாகிப் போன பின்பும்
அப்....பாவே நானாகிய பின்னும்
எதிரிகளாய் முறைத்துக் கொள்கிறோம்
என் காதல் வயப்பாட்டின் மனிதத்தில்.

தெரிந்திருந்தால்
உருவாக்கியிருப்பாரோ
நொய்ந்த விந்தொன்றின் மூலம்
அம்மா போன்ற சாதாரண பெண்ணாக.
○மாதுமை

# திரவப் பாடல்

கைக்கெட்டிய தூரத்தில் தான் இருந்தது
அந்த திரவக் குடுவை.

திரவம்

நினைவு தெரிந்த நாள் முதலாய்
தளும்பிக் கொண்டிருந்தது.

வட்ட அலை இட்ட படியே
சதா மிதந்து கொண்டிருந்தது
மையத்தில் தொடங்கி விளிம்பு வரை.

மெல்லிய பூமி அதிர்வுத் தாளத்தில்
பாடிக் கொண்டிருந்தது
ஒலி இல்லாத பாடல் ஒன்றை.

எந்த குறுக்கீடுகளும் எந்த நேரத்திலும்
பாடலை நிறுத்தி விடுமென்ற போதிலும்

அரிச்சந்திரனுக்கு
சந்திரமதித் தாலி போல
எனக்கு மட்டும்
கேட்டுக் கொண்டிருந்தது
அந்த
மௌனப் பாடல். ○மாதுமை

# என் புத்தகம்

திறந்திருந்தது
என் புத்தகம்
தாண்டிச் சென்றவர்கள்
நின்று வாசித்தார்கள்.

வழமைபோல சில
பக்கங்கள் களவாடப்பட்டன
இருந்தும்
சுவாரசியம் குறையவில்லை
தொடர்ந்தும் வாசித்தார்கள்.

சிலர் அழுதார்கள்
சிலர் சிரித்தார்கள்
சிலர் ஏதேதோ பேசினார்கள்
எல்லாவற்றையும் கேட்டும்
திறந்துதானிருந்தது புத்தகம்.

காற்று சில பக்கங்களை
திறந்து விட்டிருந்தது
கைகள் திருப்பிய பக்கங்களுக்கும்
காற்று திருப்பிய பக்கங்களுக்கும்
வித்தியாசம் இருந்தன.

எங்கிருந்தோ தாழப்பறந்து
வந்த பறவை
எச்சம் போட்டுப் பறந்தது
பறவையை துரத்தி வந்த
நாயொன்று
புத்தகத்தை கௌவிச் சென்றது. ○மாதுமை

ஊடறு கவிதைகள்

## ஆடை

அவளுக்கான ஆடையொன்று
நெய்யப்பட்டுக் கொண்டிருந்தது
இறுதியென்று தெரியாமலே.
நானும் விளக்குத் தூக்கிப்
பிடித்துக்கொண்டிருந்தேன்

என் கூரிய விழிகளும்
நடுங்காத கைகளும்
ஊசியில் நூல் கோர்ப்பதற்கு
அடிக்கடி தேவைப்பட்டன.

பேரமைதியுடன்
அவள் ஆடை
உருவாகிக்கொண்டிருந்தது.

எங்கோ
நாயொன்று ஊளையிட்டது.

இறுதி வேலைப்பாடுகளையும்
உள்வாங்கி முடித்திருந்தது
ஆடை.

நடுச்சாமம் கடந்த பின்னும்
விடியலுக்கு நீண்ட நேரமெடுத்தது
வழமையை விட.

அணிவது மட்டுமே
எஞ்சியிருந்த போது
அவள் சிரிப்பு உறைந்து
சிவப்பாயிருந்தது ○மாதுமை

வைகைச்செல்வி

இந்தியா

## போரில் சிந்தும் மகிழம் பூக்கள்

இருளின் வெறுமையில்
கனவுகளைப் பிடிக்க
கைகள் அசையும்.

இலைகள் ஏந்திய
பனித்துளியை
வெஞ்சுடர் தீய்த்தாலும்
சின்னஞ்சிறு இலைகளில்
தங்கும் பசுமை.

எங்கிருந்தோ வந்து
மென்மையாய் உரசி, பின்
வன்முறைப் புயலாய்
வலியத் தீண்டி
வெறியுடன் இழுக்கையில்...
தலையைச் சிலுப்பி
ரணங்களில் துடித்து
இருத்தலுக்காய்
போர்க்களங்கள்
தினந்தோறும் ஆயிரம். ○வைகைச்செல்வி

நன்றி - ஊடறு



